உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 12 ஞாயிற்றுக்கிழமை (26-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:61

# ஆயுதங்களைக் கைவிடுமாறு புலிகளை இப்போது நாங்கள் கேட்க முடியாது!

## அதற்கும் நேரம் காலம் உண்டு என்கிறார் பிரதமர்

கொழும்பு,ஜனவரி26

**உடனடியாகப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்றோ அல்லது அவர்களது பொலீஸ், நீதிமன்றங்களைக் கலைத்துவிடவேண்டுமென்றோ இப்போது - இந்தக் கட்டத்தில் - நாங்கள் எதிர்பார்க்க முடியாது.**

**சமாதானப் பேச்சுக்களின் பெறுபேறாக சமஷ்டித் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படும்போது இந்தப் பிரச்சினைகள் தானாகவே தீர்ந்துவிடும்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**



இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 23ஆவது பேராளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பிரதமர் உரையாற்றினார்.

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை, எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக பிரதமர் தனது நீண்ட உரையில் விளக்கிக் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான நிலையை விரும்பாத ஜே.வி.பியினரும் மற்றும் சில இனவாதக் கட்சிகளும் புலிகளுடன் ஏன் பேசவேண்டும், இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்கவேண்டும் என்கின்றனர்.

இவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அங்குலிமாலாவை தீர்த்துக்கட்டுகிறோம் என்று படை திரட்டிக்கொண்டு சென்றவர்கள் எல்லோரும் மாண்டு மடிந்தனர். அவர்களின் விரல்களை வெட்டி மாலையாக அணிந்துகொண்டாள் அங்குலிமாலா. ஆனால் எந்தவிதமான ஆயுதமுமின்றிச் சென்ற புத்த பெருமான் அன்பான போதனையாலும் அவரது பேச்சு வன்மையாலும் அங்குலிமாலாவை வசப்படுத்தினார்.

இதே நிலைதான் இன்று எமக்கும் ஏற்பட்டுள்ளது. புலிகளுடன் போராடியதைக் கண்டோம். 60ஆயிரத்துக்கும் அதிகமானவர்களின் உயிர்களையும், தேசிய செல்வங்களையும் இழந்தோம்.

இந்த யுத்தத்தில் நாம் சில வெற்றிகளைக் கண்டோம். புலிகளும் சில வெற்றிகளைக் கண்டனர். ஆனால் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி, அமைதியெல்லாம் சீர்குலைந்துவிட்டது.

இதன் அடிப்படையிலேயே நாம் புலிகளுடன் பேசுகின்றோம். குண்டு வெடிப்புகளையும், உயிர் இழப்புக்களையும் நிறுத்தியுள்ளோம். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அத்தி

(18ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் பிரசன்னம்: துணைவேந்தர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.26

நேற்று யாழ்பல்கலைக்கழக வாயிலில் 'உதயன்' நிர்வாக இயக்குநரை பல்கலைக்கழகத்துக்குள் செல்லவிடாது மாணவர்கள் தடுத்த சமயம் அப்பகுதியில் இராணுவத்தினர் சிலர் காணப்பட்டனர்.

"நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காகவே அவர்கள் அங்கு வந்திருந்தனர். வேறு எந்த விடயத்துக்காகவும் அவர்கள் அங்கு வரவில்லை." - இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

யாழ்.பல்கலைக்கழக சூழலில் நேற்றுக் காலை படையினரின் பிரசன்னம் தொடர்பாகக் கருத்துக் கூறுகையிலே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த பேரவையின் உறுப்பினர் ஒருவரை மறிக்கும் பணியிலே மாணவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், அப்பகுதிக்கு படை அதிகாரிகளின் வாகனங்களும் வந்தன.

"பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றுவதற்காக படை அதிகாரிகள் அங்கு பிரசன்னமானார்கள். மாணவர்கள், பேரவை உறுப்பினரை மறித்ததற்கும், இராணுவ அதிகாரிகள் பிரசன்னமானமைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை" - என்றார் அவர்.

இதற்கிடையில் -

மாணவரின் எதிர்ப்புக்கு அஞ்சி உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனே இராணுவத்தை பல்கலை வாயிலுக்கு தனக்கு பாதுகாப்பாக அழைத்துவந்தார் என்ற ஒரு பிரசாரமும் சம்பந்தப்பட்ட சிலரால் முழுமும்முரமாக முன்னெடுக்கப்பட்டதையும் உறுதிசெய்ய முடிந்தது.

"அது அப்பட்டமான பொய். இராணுவத்தினர் அப்பகுதியில் காணப்

(18ஆம் பக்கம் பார்க்க)

# பேரவை உறுப்பினரை மாணவர்கள் தடுத்தனர்!

## துணைவேந்தர் தேர்தல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.பல்கலைக்கழக பேரவைக் கூட்டம் மற்றும் புதிய துணைவேந்தர் தெரிவுக்கான தேர்தலில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பேரவையின் உறுப்பினரும் 'உதயன்' நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் வழிமறித்துத் தடுத்து நிறுத்தப்பட்டார். இதன் எதிரொலியாக நேற்றைய பேரவைக் கூட்டத்தை நடத்தாமல் பேரவை உறுப்பினர்களின் ஏகமனதான சம்மதத்துடன் அதனை அடுத்த 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் துணைவேந்தர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பேரவையின் மாதாந்த கூட்டமும் புதிய துணைவேந்தரை தெரிவு செய்வதற்கான தேர்தலும் நேற்று இடம்பெற ஏற்பாடாகி இருந்தன.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக தனது காரில் சரவணபவன் காலை 9.40 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக பிரதான வாயிலை அடைந்தார்.

அங்கு ஏற்கனவே தயாராக நின்ற பல்கலைக்கழக மாணவர்கள் அவரைப் பல்கலைக்கழகத்துக்குள் செல்லவிடாது தடுத்தனர். இச்சமயம் அங்கு வந்த சிரேஷ்ட பேராசிரியர்களான அ.சண்முகதாஸ், சி.க.சிற்றம்பலம், எஸ்.மோகனதாஸ், பேரவை உறுப்பினர்களான ஆ.ஜெயரத்தினம், டொக்டர் எஸ்.சிவானந்தராசா போன்றோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

பல்கலைக்கழகத்தின் உயர் பீடமாக விளங்கும் பேரவையின் உறுப்

(18ஆம் பக்கம் பார்க்க)

### செய்தியாளர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை பேரவை உறுப்பினர் மாணவர்களால் தடுக்கப்பட்ட சம்பவத்தின் போது கொழும்பில் இருந்து இயங்கும் 'நிலவு டொட் கொம்' இணையத் தளத்தின் செய்தியாளர் தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

அந்த இணையத் தளத்தின் விசேட செய்தியாளர் கஸ்.அனுராஜ் பல்கலைக்கழகத்துக்குள் செய்தி சேகரிக்கச்சென்ற சமயம் நுழைவாயிலில் நின்ற மாணவர்கள் சிலர் அவரைத் தாக்கி வெளியேற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது. நிலவு டொட் கொம் இணையத்தளம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. (ம-3)




'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனுடைய கார் பல்கலைக்கழக முன்றிலில் வழிமறித்து நிறுத்தப்பட்டிருப்பதையும் அதனைச் சூழ மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சமஷ்டி பற்றி ஆராய சென்ற குழு திரும்பியது

யாழ்ப்பாணம்,ஜன.26

சமஷ்டி முறை பற்றி ஆராயும் பொருட்டு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட தூதுக்குழுவினர் மீண்டும் நாடு திரும்பியுள்ளார்கள்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் பங்குபற்றினர்.

அமைச்சர்கள் ஜயலத் ஜயவர்த்தன, சந்திரசேகரன் மற்றும் ஆர்.யோகராஜன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நிமால் ஸ்ரீபால டி சில்வா, சரத் அமுனுகம உட்பட பலரும் இடம்பெற்றிருந்தனர். (ம-12)

## ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம்,ஜன.26

ஈ.பி.டி.பி. அமைப்பின் மல்லாகம், அச்சுவேலி அலுவலகங்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதாக கூறப்பட்டது.

இந்தத் தாக்குதல்களில் உயிர், உடைமைச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மல்லாகம் பிரதேசத்தில் செயல்பட்டுவரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ.பி.டி.பி.) பிரதேச அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. இக்குண்டுகள் விழுந்து வெடித்தமையால் டனிமனையின் சுற்றுப்புற வேலிகள் எரிந்து நாசமாகியுள்ளன. எனினும் இச்சம்பவத்தின்போது எவரும் காயங்களுக்கு இலக்காகவில்லை.

அச்சுவேலி பிரதேச அலுவலகம் மீதும் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கைக்குண்டுகள் வீசப்பட்டன. இந்த தாக்குதலினால் மின் விளக்குகள், யன்னல் கண்ணாடிகள் போன்றன சேதமாகியுள்ளன - என்றுள்ளது.

புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ம-3-12)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### வியாழன் இரவு விடுதியில் நடந்த சம்பவம்:

# புகுமுக மாணவன் மீது கொடூரமான 'ராகிங்'!

யாழ்ப்பாணம்,ஜன.26

கடந்த வியாழனன்று இரவு பல்கலைக்கழக மாணவர் விடுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகிடிவதையில் பாதிக்கப்பட்ட மாணவன் பாலியல் ரீதியில் இம்சைப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. சம்பந்தப்பட்ட மாணவனின் மூத்த சகோதரர் ஒருவர் இதனை உதயனுக்கு உறுதிப்படுத்தினார்.

குறிப்பிட்ட மாணவனான ஜெயப்பிரகாஷ் (வயது 22) வியாழனன்று நள்ளிரவு யாழ்.ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அதற்கு முன்னர் பல்கலைக்கழக விடுதியில் வைத்து சக சிரேஷ்ட மாணவர்களால் பாலியல ரீதியில் இம்சைப்படுத்தப்பட்டதாகவும் தெரியவந்தது.

தனது சகோதரர் நல்ல தேகாரோக்கியத்துடன் இருந்ததாகவும் -

அவர் மிக மோசமாகத் துன்புறுத்தப்பட்டதனாலேயே அவரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கவேண்டிய நிலை வந்ததென்றும் -

மாணவனின் மூத்த சகோதரர் உதயனிடம் தெரிவித்தார்.

இத்தகைய பாலியல் ரீதியான இம்சைகள் பல்கலைக்கழக விடுதியில் சகஜம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் வாக்குமூலப் பதிவுகள் உதயன் வசம் இருக்கின்றன.

இதேவேளை -

பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பேரவை உறுப்பினரை வழிமறிக்கும் நிகழ்வில் சிரேஷ்ட மாணவர்களால் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்ட புகுமுக மாணவர்களில் பிரஸ்தாப மாணவனும் அடங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சிரேஷ்ட மாணவன் இடை நிறுத்தம்!

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியில் வியாழக்கிழமை நள்ளிரவு நடந்த 'ராகிங்' சம்பவத்தில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் கலைப்பீட 4ஆம் வருட மாணவன் எஸ்.சில்வெஸ்டர் என்பவர் பல்கலைக்கழக கல்வியைத் தொடர துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தடைவிதித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற புகுமுக மாணவரான முல்லைத்தீவு குமுழமுனையைச் சேர்ந்த ஜெயபிரகாஷ் என்பவர் கடந்த வியாழக்கிழமை இரவு விடுதியில் வைத்து 'ராகிங்' சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் -

அதனால் மயக்கமடைந்து நுரைகக்கியநிலையில் யாழ்.ஆஸ்பத்திரியல் அனுமதிக்கப்பட்டதாகவும் -தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட விடுதிக்காப்பாளரும், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர்களும் அறிக்கை ஒன்றை துணைவேந்தரிடம் சமர்ப்பித்தனர்.

இந்த அறிக்கையை ஆராய்ந்த துணைவேந்தர் அந்த மாணவன் தொடர்ந்து கல்வியை மேற்கொள்ள தற்காலிக தடைவிதித்து நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

பல்கலைக்கழக வளாகத்துக்கும் கல்வி மற்றும் கல்விசாரா நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக விடுதியிலிருந்து பிரஸ்தாப மாணவன் வெளியேறவேண்டும் என துணைவேந்தர் உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழக ஒழுக்காற்றுக் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளவிருக்கின்றது. (ஐ-3)

## பாடசாலை மாணவருக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.26

தமிழீழ போராட்டம் தொடர்பான பாடசாலை மாணவர்களிடையிலான போட்டியின் எழுத்துப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து இந்தப் பரீட்சையை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் ஆறு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் இந்தப் பரீட்சையில் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு கேட்டுள்ளது. (ஐ-3)

## சாவகச்சேரி நீதிவானாக அரியநாயகம்

யாழ்ப்பாணம்,ஜன.26

சாவகச்சேரி மாவட்ட நீதிவானாகவும் குடும்ப நீதிமன்ற நீதிவானாகவும் கந்தையா அரியநாயகம் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் யாழ். மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் மேலதிக நீதிவானாகவும் அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் இவர் நியமனமாகிறார். இவர் ஒரு பிரபல சட்டத்தரணியாவார். (ஐ-3)

# இந்திய மீன்பிடி 'ரோலர்'களால் எழுவைதீவில் வலைகள் நாசம்

ஊர்காவற்றுறை,ஜன.26

எழுவைதீவிற்கு சமீபமாகவுள்ள ஆழ்கடற்பரப்பை ஆக்கிரமிக்கும் இந்திய மீன்பிடி ரோலர்களால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக எழுவைதீவுப் பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

திங்கள், புதன், சனி ஆகிய நாள்களில் படையெடுத்துவரும் இந்திய மீன்பிடி ரோலர்கள் எழுவைதீவு, அனலைதீவு கரையோரத்திற்கு சமீபமாக வந்து செல்வதாகவும் -

இவ்வேளையில் கடலில் போடப்பட்ட தமது மிதப்பு வலைகள் மேற்படி ரோலர்களினால் இழுத்து அல்லது அறுத்து செல்லப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனால், இந்திய மீன்பிடி ரோலர்கள் வந்து சென்ற பின்பே தாங்கள் கடலுக்கு சென்று தொழில செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

### உதயனுக்கு

# இதுவும் வேண்டும்! இன்னும் வேண்டும்!!

*உதயன் கொழும்பு அலுவலகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்ட கடிதம் ஒன்றின் சாரம்சம் இது. கடிதத்தில் உதயனுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்ட ஏனைய பல குற்றச்சாட்டுக்கள் தற்போதைய பல்கலை மாணவர் பிரச்சினையோடு தொடர்புபட்டவை அல்ல என்பதால் அவற்றைத் தவிர்த்திருக்கிறோம். (ஆ-ர்)*

'உதயன்' பத்திரிகை வாங்குவதையும் வாசிப்பதையும் தடுக்க யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தீர்மானம் என்ற செய்தியை இணையத் தளத்தில் பார்த்தேன். உதயனுக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்.

'வளர்த்த கடா மார்பில் பாய்ந்த' கதைதான் இது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை இத்தகைய அராஜகப் போக்கிற்கு எண்ணெய் ஊற்றி வளர்த்ததே இந்த உதயன்தான். அப்போது 'உதயனின் பிழையான வழிநடத்தலை பின்பற்றாதீர்கள்; கெட்டழிவீர்கள்' என்று மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம். ஆனால் அடிவருடி மாணவ தலைவர்கள் அதை ஏற்கவில்லை. உதயன் ஊற்றிய எண்ணெயில் 'பொங்கி' எழுந்தார்கள். இன்று நிலைமை என்ன?

'தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்' அன்று, தான் விதைத்த விதையை இன்று உதயன் அறுக்கிறான். அவ்வளவுதான்.

இப்போதும்கூட உதயன் திருந்திவிடவில்லை. நெடுந்தீவில் தூண்டிவிட்டீர்கள். இன்று காலை நாங்கள் கேள்விப்பட்டது உண்மையென்றால் நெடுந்தீவில் நீங்கள் (உதயன்) எதைத் தூண்டி விட்டீர்களோ - குடாநாட்டில் ஏனைய இடங்களில் எதை ஊக்கப்படுத்துகிறீர்களோ - அதையே நீங்களும் இன்று எதிர்கொள்கிறீர்கள்.

இனியாவது, மாணவர் சக்தியை தவறாக தூண்டிவிடாமல் பொறுப்பாக நடந்துகொள்ளுங்கள். மாணவர்கள் பொறுப்பாக நடந்துகொண்டால்தான் சமூகம் உய்யும்.

*பார்க் வீதி,*
*கொழும்பு.*

**சின்னவன்.**

### சமூகத்தின் உணர்வலைகள்...

# பத்திரிகைச் சுதந்திரத்தை அடக்கியாள முனைவதா?

உதயனில் கடந்த 21.01.2003 அன்று வெளிவந்த செய்தி எம்மைப் பெரும் வேதனைக்கு உட்படுத்தியது. யாழ்.பல்கலைமாணவர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் நகைப்புக்குரியதாகும். ஏனெனில் 'பகிடிவதை' என்னும் கொடிய அரக்கத்தனமான செயலுக்கு ஆதரவு வழங்கும் இவர்களை எண்ணிப் பார்க்கும் பொழுது இவர்கள் படித்து, சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதி பெற்றார்களா அல்லது அதற்கும் மிரட்டி (பகிடிவதைபோல்) நுழைந்தார்களா என்று எண்ணத்தோன்றுகின்றது. 16ஆம் திகதி உதயனில் வந்த செய்தியை அனுப்பிய எஸ்.ஆறுமுகம் நேரில் வந்து உறுதிப்படுத்த பகிடிவதை அரக்கர்களிடம் பயந்து வராமல் இருந்திருக்கலாம். துணைவேந்தருக்கு இது புரியாமல் இருக்குமா? மேலும் வாசகர்களின் வாதப் பிரதிவாதங்களை முன்வைத்து எழுதவே பத்திரிகை. இதனை எழுதிய ஆறுமுகம் அவர்களின் செய்தியை 'உதயன்' வெளியிட்டதில் என்ன தவறு? இதுபோன்ற நடவடிக்கை நடந்திருக்காது என்பதில் என்ன நிச்சயம்? உரிய விடைகிடைக்கும் முன் மாணவர்களின் பகிஷ்கரிப்பு கேலிக்கூத்தாகும். இதேபோல் பல்கலைக்கழகம் ஒன்றில் சிரேஷ்ட மாணவர்களால் ஜப்பானிய மாணவிக்கு நேர்ந்த அனர்த்தத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இவர்களின் இக்கோரிக்கைக்கு 'உதயன்' தலைவணங்கவே கூடாது. இது உண்மையோ, பொய்யோ தெரியாமல் இருந்தாலும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிடுவதற்கே உள்ளது. அதில் எந்தத் தவறும் இல்லை. உதாரணமாக ஒரு தலைவர் இன்று ஒரு முடிவை எடுத்துவிட்டு, நாளை வேறொரு முடிவை எடுப்பார். அந்த இரு செய்திகளையும் பத்திரிகைதானே வெளியிடுகிறது. மக்களுக்கு ஒரு செய்தியை தெரியப்படுத்தும் உரிமை பத்திரிகைக்கு உண்டு. இதைக் கேட்க பல்கலை மாணவர்களுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் ஒரு கூற்றைத் தெரிவிக்கவேண்டும். பல்கலை மாணவர்கள் 'பார்' கடைகளில் கணக்கு வழக்கில்லாமல் குடித்துவிட்டு பணம் கொடுக்காமல்போனதை நான் அறிந்தேன். இது நியாயமென்றால் உதயன் செய்தியும் நியாயமானதே.

**அஞ்சனா-மாருதி.**

# ஸ்பெயினில் அல்கெய்டாவின் தாக்குதல் திட்டம் அம்பலம்!

## பொலீஸ் முற்றுகையில் 16 பேர் கைது!!

மட்றிட்,ஜன.26

ஸ்பெயினில் 'அல்கெய்டா' தீவிரவாதிகள் மேற்கொள்ளவிருந்த பெரும தாக்குதல் ஒன்றை தாங்கள் முறியடித்துவிட்டதாக அந்நாட்டு பிரதமர் அறிவித்திருக்கிறார்.

இந்தத் தாக்குதல் திட்டம் அம்பலமாகியிருப்பது 'பயங்கரவாதத்துக்கு

### உலக அரங்கில்

எதிரான நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிடக்கூடிய சம்பவம் என்று ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் மரியா அஸ்னர் தெரிவித்திருக்கிறார்.

ஸ்பெயினின் வடகிழக்கில் கற்றலோனியா பிராந்தியத்தில் ஸ்பெயின பொலீஸார் நடத்திய ஒரு முற்றுகையில் 'அல்கெய்டா' தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுகின்ற 16 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பயங்கரவாத ஒழிப்பு பொலீஸார் 150 பேர் இந்தத் தேடுதல் முற்றுகையை நடத்தியிருக்கின்றனர்.

அண்மையில் பிரிட்டனிலும், பிரான்ஸிலும் இரசாயன மற்றும் வெடிகுண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய தீவிரவாதிகளுக்கும் ஸ்பெயினில் கைது செய்யப்பட்டிருப்பவர்களுக்கும் இடையே இயங்கிய வலைப்பின்னல் தொடர்புகளையும் தாங்கள் கண்டுபிடித்திருப்பதாக ஸ்பெயின் பொலீஸார் கூறுகின்றனர். (ஐ)

# இந்தியத் தலைவர்களைக் கொல்ல அல் கெய்டா இரகசியத் திட்டம்!

## டில்லி பொலீஸ் அதிகாரி எச்சரிக்கை

புதுடில்லி,ஜன.26

இந்தியத் துணைப் பிரதமர் எல்கே. அத்வானி மற்றும் இந்துமதத் தலைவர்களைக் கொல்ல அல் கெய்டா தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாக டில்லி பொலீஸ் அதிகாரி எஸ்.கே.கான் கூறினார்.

புலனாய்வு அமைப்புகள் அளித்த இரகசியத் தகவலை அடிப்படையாக வைத்து அவர் இதைத் தெரிவித்துள்ளார். டில்லியில் அல் கெய்டா தீவிர வாதிகள் பதுங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

செய்தியாளரிடம் அவர் கூறியதாவது:-

மைக்ரோலைட் விமானத்தைப் பயன்படுத்தி அல்கெய்டாவினர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், மெட்ரோ ரயில், செங்கோட்டை அல்லது முக்கிய பொது இடங்களைத் தாக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர். தற்கொலைப் படையைச் சேர்ந்த பெண் தீவிரவாதிகள் டில்லியிலோ அல்லது புறநகர்ப்பகுதியிலோ ஒளிந்திருக்கலாம் என்ற தகவலும் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது - என்றார் அவர். (ஒ)

# ஆப்கான் - பாக். எல்லைப் பகுதியில் மீண்டும் தீவிரவாத பயிற்சி முகாம்கள்

## ஐ.நா. ஆய்வறிக்கையில் தகவல்

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் அதிகரித்து வருவதாகவும் -

இங்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஏராளமாகப் பதுக்கிவைத்திருப்பதாகவும் - ஐ.நா.அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஐ.நாவும் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் இணைந்து நடத்திய ஆய்வின் முடிவில் பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தீவிரவாதிகள் பயிற்சி முகாம் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இதை உறுதிப்படுத்தும் வகையில் அங்கு ஏராளமான தீவிரவாத பயிற்சி முகாம்கள் இருப்பதும், ஆயுதங்கள், வெடிமருந்துகள் குவித்து வைக்கப்பட்டிருப்பதும் இப்போது தெரியவந்துள்ளது.

ஆப்கான் தீவிரவாதிகளைத் தேடி கடந்த ஆண்டு இறுதியில் அமெரிக்க ஹெலிகொப்டர்கள் மலைப் பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்தின.

அந்தச்சமயத்தில், ஒகாய் கிராமத்தின் அருகிலுள்ள தீவிரவாத முகாமில் தங்கி பயிற்சி பெற்றதாக ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 23 வயது இளைஞர் நஜிபுல்லா தெரிவித்துள்ளார். வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தவும், தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தவும் தமக்கு பயிற்சி அளிக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின் லேடனின் ஆதரவாளர்களான அரபுகள்தான் இந்த முகாம்களில் பயிற்சியாளர்களாக உள்ளனர். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களும், அரபு நாட்டைச் சேர்ந்தவர்களும் முகாம்களில் பயிற்சி பெறுகின்றனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணிப் படைகளை விரட்டி அடிக்கவும், ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க ஆதரவு ஹமீத் கர்ஸாய் அரசைப் பதவியிலிருந்து அகற்றவும் உயிரைக் கொடுக்கவும் இங்கு பயிற்சி பெறுபவர்கள் தயார்படுத்தப்படுகின்றனர் - என்றுள்ளது. (ஒ)

## விஷ உணவால் 200 பேர் மயக்கம்!

சீனாவில் குவாண்டோங் மாகாணத்திலுள்ள பன்யூ நகரில், பிளாஸ்டிக் தொழிற்சாலையில் பணிபுரியும் 200 ஊழியர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது.

தொழிற்சாலை உணவகத்தில் விஷம் கலந்த உணவை ஊழியர்கள் சாப்பிட்டதே இச்சம்பவத்துக்குக் காரணம். பத்துப்பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மற்றவர்கள் முதலுதவி சிகிச்சைக்குப் பின் அனுப்பிவைக்கப்பட்டனர். (ஒ)

# இப்படியும் ஒரு மறியற்போர்....













யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினரான 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் நேற்று பல்கலைக்கழக வாயிலில் வைத்து மாணவர்களால் தடுக்கப்பட்ட சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
















# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

டாக்டரின் பாவனையிலுள்ள C90 HONDA மோட்டார் சைக்கிள் மற்றும் FORD ESCORT CAR விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பின்வரும் இடத்தில் பார்வையிடலாம். V.ஜெயக்குமார், 29, செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (13637)

B.P Solar (சோலர்) 70 Watts விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.தயாளன் (மகளிர் கல்லூரிக்கு முன்பாக), மானிப்பாய். (13703)

CG125 மொடல் Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு: 85,செம்மணி வீதி (கல்விக் கந்தோர் அருகில்), நல்லூர். (13709)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (முடமாவடிச் சந்திக்கும் பூங்கனிச்சோலைக்குமிடையில்). (13642)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ என்பன சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். தொடர்பு:21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம ரெஸ்ரோறன்ற் முன்பாக). (13657)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13350)

## கோழிக்குஞ்சு விநியோகம

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள 30.01.2003 வியாழன் பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோசென்ரர்வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13659)

## மாடிவீடு விற்பனைக்கு

பருத்தித்துறை V.M. வீதி சந்தியில் (வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) மாடிவீடு 'பிறேமா இல்லம்' விற்பனைக்குண்டு (தரகர் வேணடாம்). உடன் தொடர்பு கொள்ளவும். திருமதி ச.கிருஷ்ணபவான், 'பிறேமா இல்லம்', V.M.வீதி, பருத்தித்துறை. (13490)

## வீடு விற்பனைக்கு

நாவலடி, கோப்பாய் மத்தியில் 10 பரப்புக் காணியும் பெரிய புதிய கல்வீடும் (யாழ்.பருத்தித்துறை வீதி அருகில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: மு.சு.மயில்வாகனம், முதலியார்வளவு, கோப்பாய். (13605)

## தேவை

யாழ்ப்பாணம், சுன்னாகம், அச்சுவேலி ஆகிய பகுதிகளில் கடை வாடகைக்கு அல்லது குத்தகைக்குத தேவை. முழு விரைத்துடன் விண்ணபிக்கவும். விளம்பர இல.1758,மே/பா உதயன். (சி-26223)

## மணமகள் தேவை

இந்து உயர் கௌரவ குடும்பம், 43 வயது, சதயம் 8 செவ்வாய் (பாவம குறைவு),, சொந்தமாக நிறுவனம் நடத்தும் விவாகரத்துப் பெற்றவருக்குத தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகக் குறிப்பு உட்பட சகல விவரங்களையும் அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல.1759, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (13707)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பணிபுரியும், விசாக நட்சத்திரமும் 1972இல் பிறந்த, லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5அடி உயரமுள்ள மணமகள் தேவை. புகைப் படம், ஜாதகக்குறிப்புகளுடன் நேரில் சமுகந்தரவும். ப.கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப் பாணம்.T.P.- 2789. (13609)

## திருமண சேவை

1978 அனுசம், செவ்வாய் 7, சைவம், படித்த அழகான மணப் பெண்ணுக்கு மணமகன் வெளியூர்/ உள்ளூரில் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (13699)

## தவறிவிட்டது

கரவெட்டியைச் சேர்ந்த கி.கருணாகரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.600921738V) ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்துதவவும். (13684)

## பிரத்தியேக வகுப்புகள்

ஆண்டு 6 தொடக்கம் O/L வரை அனைத்துப் பாடங்களும் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன.

*குறிப்பு:* **ஒவ்வொரு மாணவர்களும் விசேடமாகக் கவனிக்கப்படுவர்.**

தொடர்பு: ***இல. 6, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.***

*(யாழ். நூல் நிலையத்திற்கு எதிரேயுள்ள ஒழுங்கை)*

(13702)

MURTHY
2789

யாழ்.F.M. சேவையில்
☆ வர்த்தக விளம்பரம்
☆ பிறந்த தின வாழ்த்து
☆ மரண அறிவித்தல்

எதுவானாலும் விளம்பரம் செய்திட யாழ். ~ கொழும்பு பிரயாண ஒழுங்குகள் செய்திட நாடுங்கள்

**மூர்த்தி**
விளம்பர சேவை
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
☎ 2789 (சி-26166)

வரையுள்ள

**நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

நெடுந்தீவு

(யா 1662-1979-12-05)

## விசேட பொதுக் கூட்டம்

**ஏற்கனவே, பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு அறிவித்த தன் பிரகாரம், சங்கத்தின் புதிய இயக்குநர்களைத் தெரிவு செய்யும் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 2003.02.02 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பொதுச் சபை பிரதிநிதிகளைத் தவறாது சமுகம்தரும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்**

சு.கணேசலிங்கம்
**தலைவர்,**
நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம்.
2003.01.25

இரா.தர்மலிங்கம்,
செயலாளர்.

(c/26222)

# பாடசாலைகளுக்கு நிதி வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,ஜன.26

இந்து சமய விவகார அமைச்சு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இந்து சமய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவு செய்வதற்கு நிதி உதவி வழங்கவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் இந்து மன்றங்களின் வங்கிக் கணக்கில் நிதியை வைப்புச் செய்வதற்கு வசதியாக, பாடசாலை இந்து மன்றத்தின் நிர்வாகிகள் விவரம் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட இந்து மன்றத்தின் வங்கிக் கணக்கு இலக்கம் என்பன தொடர்பான விவரங்களைத் திரட்டுவதற்கான படிவங்களை பாடசாலைகளுக்கு அமைச்சு அனுப்பிவைத்துள்ளது. (எ-11)

சிவமயம்

# பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைத்திங்கள் 13 ஆம் நாள்(27.01.2003)
திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள
சித்தயோகம் கூடிய சுபயோக சுபமுகூர்த்தத்தில்



**எமது புத்திரி திருநிறை செல்வி**

## நாகதர்ஷினி



அவர்களுக்கு

பூப்புப்புனித நீராட்டு விழாச்செய்ய அருள்மிகு ஸ்ரீ பிடாரி அம்பாளினதும், அருள்மிகு ஸ்ரீ நாகபூசுணி அம்பாளினதும் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள்சுற்றம் சூழ வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

**7ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**திருமதி உருத்திரலிங்கம் - திரிபுராம்பாள்**
**(தில்லா - ஆசிரியை).**

(13710)





புதன், சனிக் கிழமைகளில் சீட்டிழுப்புகளில் பணப்பரிசு பெறாத டிக்கட்டுகளுக்கு ரூ.65,000க்கும் கூடுதலான பெருமதியுடைய தங்க நகைகள் அடங்கிய 5 பரிசுகள்.

பணப்பரிசு பெறாத உங்கள் டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள் கம்யூட்டர் கொடுக்கும் தொடர் இலக்கங்களுடன் பொருந்தினால் உங்களுக்கு தங்க நகைப்பரிசு. அன்றைய தினம் ரூபவாஹினி மூலம் நேரடியாகவும் பத்திரிகைகள் மூலம் வெற்றி விபரங்களை தெரிந்து கொள்ள முடியும்.

உதயன்

## கல்வித் தரமும் யதார்த்தமும்

புகழ்பூத்த ஆசிரியர்களால், அதிபர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட குடாநாட்டின் கல்வித் தரம் இன்று வீழ்ச்சியடைந்து கேள்விக்குறியாகிவிட்டது. வீழ்ந்துபோயுள்ள கல்வித் தரத்தை தூக்கிநிமிர்த்தி வளர்த்தெடுக்க கல்விச் சமூகத்தினர் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முன்வரவேண்டும்.

- இவ்வாறு குடாநாட்டு சமூகத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்.

குடாநாட்டின் கல்வித்தரம் தொடர்பாக இங்கு பலருக்கு இருக்கின்ற கவலையையே பேராசிரியர் பாடசாலை நிகழ்வு ஒன்றில் வைத்துச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

குடாநாட்டின் கல்வித் தரத்தின் பழைமையையும் பெருமையையும் நினைவுகூருகின்ற பலரும் இப்போதைய நிலையை எண்ணிப்பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனர்.

குடாநாட்டின் கல்விப் பாரம்பரியத்தை வளர்த்து எடுத்தவர்கள் - அதன் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்தவர்கள் மூன்று தரப்பினர்.

அதிபர்கள், ஆசிரியர்கள் போன்ற கல்வியியலாளர்கள், குருவை மதித்து கல்வியைக் கற்றுவந்த மாணவர் பரம்பரை, கல்வியே கண்ணெனக்கொண்டு வாழ்ந்த பெற்றோர் சமூகம்.

குடாநாட்டுக் கல்வித் துறையின் பெருமையும், பழைமையும் இந்த முத்தரப்பினர்களால்தான் கட்டி வளர்க்கப்பட்டுக் காக்கப்பட்டது.

இன்று இந்த முத்தரப்பினரதும் நிலையை - நிலைப்பாடுகளை - மீளாய்வு செய்தால் கல்வி தரமாக இல்லையே என்ற கவலை எழாது.

'உன்னுடைய நண்பனைச் சொல்லு உன்னைப் பற்றிச் சொல்கிறேன்' என்ற ஒரு வாக்கு உண்டு. அதுபோல ஓர் ஆசிரியரின் அல்லது அதிபரின் பெயரை சொன்னவுடனேயே மாணவனை மதிப்பிட்டு விடக்கூடிய நிலை முன்பு இருந்தது. கல்விப் பாரம்பரியம் என்பது புகழ் பூத்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்களால் எழுப்பப்பட்டு வந்தது. ஆமை அமைதியாக ஆயிரம் முட்டைகளை இடுவதுபோல் அமைதியாக இருந்து ஆயிரம் நன்மாணாக்கர்களை உருவாக்கிவிட்டு வாழ்ந்து மறைந்துபோன கல்வியியலாளர்களின் பரம்பரை இன்று அஸ்தமித்துவிட்டது.

மனிதப் பண்புகளை வளர்க்காத கல்வி கல்வியே அல்ல. அந்தவகையில் பெற்றோர்களின் நிலையோ கவலைக்குரியது. அரிவரிமுதல் பல்கலைக்கழகம் வரை பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் கல்வியை நோக்குகின்றவர்களாகவும் எதையாவது செய்து, எதையாவது திணித்து, பிள்ளையைப் பரீட்சை என்கின்ற தடைகளைத் தாண்டி ஓடுவதற்கு விரட்டிச் செல்கின்ற அறியாமை நிறைந்தவர்களாகவும் பெற்றோர்கள் மாறிவிட்டனர்.

பிள்ளைகளின் மனதில் கபடத்தை, போட்டி மனப்பான்மையை, பொருளாதார நலன்களை மட்டும் விதைக்கின்ற கல்விப் போக்கு ஒருபோதுமே நல்ல கல்விப் பாரம்பரியமாகிவிடப் போவதில்லை.

மாறிவருகின்ற உலகில் கல்வியும் மாற்றங் கண்டு வருவது கண்கூடு. ஆனால், மாற்றங்கள் மனிதப் பண்புகளுக்கு முரணர்க மனிதனை மாற்றிவிடுகின்றன என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

இன்று புகழ்பூத்த ஆசிரியர் பரம்பரை அருகிவருவதுபோல, பாடசாலைகளும் அவற்றின் மேன்மையை இழந்துவருகின்றன.

கல்வி நிர்வாகத்தில் மலிந்துள்ள ஊழல்கள், ஆசிரியர் - அதிபர்கள் இடையிலான ஒத்திசைவின்மை, பதவிகளுக்கும், கதிரைகளுக்கும் நடக்கின்ற இழுபறிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள் ஆகிய தரப்பினர்களிடையிலான முரண்பாடுகள் இவையெல்லாமே இன்று குடாநாட்டின் கல்விப் பாரம்பரியத்துக்குக் குறுக்கே பூதாகாரமாக மாறிவருகின்ற தடைகள்.

பெற்றோர்களாலும், சமூகப்பொறுப்புள்ளவர்களாலும் மாணவர்கள் வழிநடத்தப்பட்ட காலம் மாறி இன்று பள்ளிக்கூட மாணவர்கள் வீதியிலிறங்கி ஏனையோரை வழிநடத்த முற்படுகின்ற சூழலைத் தாராளமாகக் காணமுடிகின்றது.

மாணவர்களின் சக்தி, குழுவாக இயங்கும் மனப்பாங்கு இவற்றைத் தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தி, இலாபம் தேடுகின்ற சக்திகளின் மறைமுகச் செயற்பாடுகள் இவையெல்லாம்கூட கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகின்றன.

இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்காமல் - கண்டுங் காணாமல் இருந்துகொண்டு - கல்வித் தரம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.

குடாநாட்டுக் கல்வித்துறையை மறுமலர்ச்சி காணவைப்பது என்பது சமூகத்தின் சகல தரப்பினர்களினதும் அர்ப்பணிப்பு, வரம்புகளுக்கு உட்படாத சேவை மனப்பான்மை, உள்ளார்ந்த விழிப்புணர்வு இவைமூலமே சாத்தியமாகக் கூடியது.

# பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியை முறைப்படி கையாளுங்கள்

## மாகாணக் கல்வி அமைச்சு அதிபர்களுக்கு அறிவுறுத்து

பாடசாலை அபிவிருததிச் சங்கத்தின நிதியைக் கையாளும் - பயன்படுத்தும் சமயங்களில் கண்டிப்பான நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சம்பந்தப்பட்டவர்களுக்கு சுற்றறிக்கைமூலம் அறிவித்துள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியைப் பயன்படுத்துவதற்கு முன்னர் கல்விப் பணிப்பாளர்களிடம் உரியமுறையில் முன்னனுமதி பெறப்படவேண்டும்.

அவ்வாறு முன் அனுமதி பெறப்படாமல், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதி பயன்படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அண்மைக் காலத்தில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் பெருமளவு நிதியை பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்.

சில பாடசாலை அதிபர்கள் லட்சக்கணக்கான ரூபா பணத்தைக்கூட வலயக் கல்வி அதிகாரிகளின் அனுமதி இன்றி துஷ பிரயோகம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதை அடுத்து தொடர்ந்து மாகாணக் கல்வி அமைச்சின் நிதிப்பிரமாண நடைமுறையைக் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதுடன், 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பயன்படுத்தப்படும் இடத்து நிதி பயன்படுத்தும் வேலைத்திட்டத்தின் பூரண விவரம் சமர்ப்பிக்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதி பெறப்படவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

### உரியகாலத்தில் பதவியுயர்வு, சம்பள ஏற்றம்:

# ஆசிரியரின் குறை களையாமல் சேவையை எதிர்பார்க்கமுடியாது!

## யாழ்.கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் தெரிவிப்பு

குருநகர்,ஜன.26

ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் பதவி உயர்வுகள் யாவும் உரியகாலத்தில் வழங்கப்படவேண்டும். இல்லையேல் அவர்களிடமிருந்து திருப்திகரமான சேவையை எதிர்பார்க்க முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.கல்வி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று நேற்றுமுன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட அவர், கல்வி வலய உத்தியோகத்தர்கள் மத்தியில் உரை நிகழ்த்தியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கல்விப்புல உத்தியோகத்தர்களாகிய நாம், அலுவலகத்தை எமது வீடாகக்கருதி அதனைப் புனிதமாகப் பேணவேண்டும். அதேபோன்று தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவரும் அதிபர்கள், ஆசிரியர்களுடன் பண்புடன் நடந்துகொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும்.

இத்தகைய தன்மையே கல்விச் சமூகத்தினரிடையே நல்லெண்ணச் சூழலை உருவாக்கும்.

தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது நாம் சுகாதார நிலையில் பின்தங்கிய நிலையில் உள்ளதை அறியமுடியும். சிறந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதன்மூலம் சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றச் செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் கல்வியறிவு முன்னரைவிட பின்தங்கிய நிலையில் உள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், திணைக்கள ஊழியர்கள் ஆகியோர் ஒருமித்து உரமாக வேலைசெய்தால் பின்தங்கிய நிலையில் உள்ள எமது கல்வியை உயர்த்தமுடியும்.

எமது மக்களிடையே பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் வக்கிரத்தன்மை அதிகரித்துள்ளது. கடந்த வருட இறுதியில் உரும்பிராய் பாடசாலை மாணவியின் கொலை இதற்கு உதாரணமாகும் - என்றார்.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் இ.நாகராசா, கணக்காளர் ஆர்.துரைசிங்கம், ஆசிரிய ஆலோசகர் எஸ்.ஸ்ரீதயாளன் மற்றும் அலுவலர்களும் உரைநிகழ்த்தினர். (எ-51-10)

### பருத்தித்துறை நகரப் பகுதியில்

## பஸ்நிலையத்துக்கு இடம் ஒதுக்கீடு: சேவைகள் வழமைக்குத் திரும்பின

வடமராட்சி,ஜன.26

பருத்தித்துறை நகரில் பஸ்நிலையத்துக்கு நகரசபை உரிய இடம் ஒதுக்கியதையடுத்து, வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் வண்டிகள் பருத்தித்துறை பஸ்நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் சேவையிலீடுபட்டுவருகின்றன.

பஸ்நிலையத்திற்குள் ஓட்டோ, மினி பஸ்வண்டிகளின் ஆகிரமிப்பினால் பஸ்வண்டிகளை அங்கிருந்து சேவையிலீடுபடுத்த முடியாதநிலை இருப்பதாகத் தெரிவித்து கடந்த சில தினங்களாக பஸ் வண்டிகள் யாவும் பருத்தித்துறை டிப்போ முன்பாக இருந்து சேவைகளில் ஈடுபட்டு வந்தன.

இதனையடுத்து ஓட்டோக்கள், மினி பஸ்கள், வ.பி.போ. சபையின் பஸ்வண்டிகள், துறைமுகத்தில் பொருள்களை ஏற்றும் லொறிகள் ஆகியவற்றை நிறுத்திவைப்பதற்குரிய இடங்களை உள்ளடக்கி பருத்தித்துறை நகரசபையால் பாதுகாப்பு வேலியாக முள்கம்பி போடப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், முன்னைய காலங்களிலிருந்ததுபோல நகர்ப் பகுதியான பஸ்நிலைய மையப் பகுதியில் ஒரு வழிப்பாதை ஊடாகவே வாகனங்கள் செல்லவேண்டும்.

பஸ்நிலையத்துக்கு உரிய இடம் ஒதுக்கப்பட்டதைத் தொடர்ந்து வ.பி.போ.ச. பஸ்கள் பருத்தித்துறை பஸ்நிலையத்திலிருந்து தமது வழமையான சேவைகளை ஆரம்பித்தன. (எ-173)

### நாளை

தை 13
திங்கட்கிழமை
(27.01.2003)
திதி : தசமி
முன்னிரவு 10.32 வரை.
நட்சத்திரம் : அனுஷம்
பின்னிரவு 4.04 வரை.
சுபநேரம் : 12.36 - 2.06
ராகுகாலம் : 8.06 - 9.36
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சேமிக்க இயலும் வேளையில் செலவு செய்யாதே! செலவழிக்கவேண்டிய வேளையில் மீதம் பண்ணாதே.

### ஜி.சீ.ஈ. சாதாரணதர

## தெரிவுப் பாட விடைத்தாள் மதிப்பீட்டுத் திகதி அறிவிப்பு

அச்சுவேலி,ஜன.26

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் தெரிவுப் பாடங்களுக்கான விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறும். விடைத்தாள்கள் மதிப்பிடும் பணிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலக்கியம், புவியியல், அபிவிருத்தி, உடல்நலக் கல்வி, வரலாறு உள்ளிட்ட தெரிவுப் பாடங்களின் விடைத்தாள்களே இவ்வாறு மதிப்பீடு செய்யப்படவுள்ளன. (எ-11)


## அன்பே - எம்மை ஆளக் கூடியது!



மனஅதிர்ச்சி அல்லது உளப்பாதிப்பு ஏற்படும் வகையில் தண்டித்தல்

**ஆசிரியர்களே!**

← இவ்வாறு தண்டனை வழங்குவதன்மூலம் மாணவர்களை ஆற்றுப்படுத்தமுடியும் என இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறீர்களா?

அடிதடிகளும், அகோர தண்டனைகளும் அவர்களை ஆற்றுப்படுத்துவதற்குப் பதில் அழித்துவிடுகின்றன.

உற்சாகத்துடன் ஊக்கத்தையும் கெடுத்து, வன்முறை மிகுந்த எதிர்காலத்திற்கு வழிவகுத்துவிடுகின்றன.

வெளியீட்டு அனுசரணை SC (UK)

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். : T.P.:222- 2261 Ext.274

(சி-26220)

## பதவி வெற்றிடம்

வெள்ளவத்தை, கொழும்பு - 06 இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உள்ளூர் விமான சேவையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்ற ஸ்தாபனத்துக்கு முகாமையாளர், கணக்காளர், விற்பனையாளர்கள், பாதுகாவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள் தேவைப்படுகின்றார்கள். மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் உள்ளூர், வெளியூர்ப் பயணிகள், பயணச்சீட்டுக்களை கையாள்வதில் திறமையும், முன்னனுபவமும் பெற்றிருப்பதுடன் மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

விள.இல. 1757,
C/o உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/26204)





## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 01 - 1944 | 27 - 12 - 2002 |

### திருமதி இராமையா திருமலர்

குடும்பத்திற்கொரு குலவிளக்காகவும்
கணவனுக்கு ஏற்ற உத்தமியாகவும்
தாய்க்கோர் இலக்கணமாகவும்
அன்பின் உருவமாகவும்
பண்பின் சிகரமாகவும் திகழ்ந்து
உலகத்திற்கோர் எடுத்துக்காட்டாய்
வாழ்ந்த எங்கள் அன்னையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

10 ஆம் கட்டை,
ஆவரங்கால், புத்தூர். (13662)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 - 08 - 1910 | 27 - 12 - 2002 |

சிவபதம் அடைந்த எமது தாயார்

### திருமதி இராமசாமி கண்மணி

அவர்களின் வீட்டுகிருத்தியம் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். நண்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

105, அரசடி வீதி,
பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். (13671)

குடும்பத்தினர்
இ.சோமசுந்தரம் (மகன்)


## வீட்டில் இருக்கும் முதியோரை, நோயாளரைப் பராமரிக்கும் சேவை

CHNS CEYLINCO HOME NURSING SERVICES

உங்கள் உற்றார், உறவினரைப் பராமரிக்க
வீட்டில் ஒருவர் இல்லையே! என்ற கவலையா?
கவலையை விடுங்கள்

இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளில் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிக் காத்திருக்கிறது.

உடனே தொடர்பு கொள்ளுங்கள்.



முதலாவது மாடி,
173, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P. 222 - 2310

சிலிங்கோ கூட்டுநிறுவனம்
சிலிங்கோ வீட்டுத் தாதிய
பராமரிப்புச் சேவை.

(C-26201)


## ஈரவிழிகளுடன் மூன்றாண்டு நினைவில்



திருமதி

### டல்சியா மயூரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21-05-1983 | 26-01-2000 |

நீ மறைந்து மறைந்ததோ மூன்றாண்டு
ஆனால், நாமோ வாடுகிறோம் உம் நினைவால்
யார் வந்து கூறுவர் ஆறுதல் - எமக்கு?
நீ மீண்டும் வருவாயோ? என ஏங்குகின்றோம்.
இன்று ஏக்கமே எமது வாழ்வாகிவிட்டது.

கணவர், தாய், தங்கை,
ஐயா, அம்மம்மா, டாலிங்மாம்
மற்றும் உறவுகள்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (13607)


# Do you have what it takes to be part of the No. 1 Insurance Team?

We are Ceylinco Insurance, Sri Lanka's No.1 Insurance Company in the private sector with a network of branches throughout Sri Lanka. Backed by our firmly established reputation for innovation, integrity and sound financial standing, our product portfolio includes a range of product for corporate, domestic, group and individual needs alike.

We are on the look out for exceptional individuals to join our team and to enjoy the work experience in a highly rewarding and challenging environment. Once chosen, the candidates can look forward to extensive training and unlimited earnings provided they have perseverance and willingness to succeed.

# Marketing Executives

The ideal candidates will be below 30 years of age, preferably with around 2- 3 years of experience in sale / marketing. The chosen candidates will be results - oriented team players. They will have good interpersonal and communication skills with enthusiasm, drive and commitment. They will be able to communicate in English and Sinhala / Tamil with flair.

Selected candidates can look forward to excellent career prospects in our permanent cadre and an attractive remuneration package, inclusive of company maintained motorcycle, travel allowance, annual bonus, medical insurance, reimbursement of medical expenses and attractive incentives directly linked to performance.

Please bring you application on 28th January 2003 at 11.00 a.m for a interview.

*Assistant General Manager (North)*
**CEYLINCO INSURANCE CO. LTD.**
*173, Stanley Road, Jaffna. (General)*

# புத்தாண்டில் உங்கள் பலன்கள்

## மீனம்

(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

இல்லம் தேடி வருபவர்களுக்கு உள்ளம் மகிழ கொடுத்துதவும் மீன ராசி வாசகர்களே!

மற்றவர்கள் செய்ய முடியாத காரியத்தை எளிதில் செய்து முடிக்கும் திறமை பெற்றிருப்பீர்கள். பிறரது மனநிலையை அறிந்து கொண்டு அதற்கேற்றார் போல் செயல்படுவீர்கள். வாழ்க்கையில் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். நீங்கள் தவறு செய்தாலும் அதை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பதவி தானே தேடி வரும். அதுதான் உங்களின் தனித்தன்மை.

பிரயாணம் செய்வதில் அதிகம் நாட்டம் கொள்வீர்கள். அன்னதானம் முதல் ரத்ததானம்வரை செய்யும் மனப்பான்மை பெற்ற உங்களுக்கு நிதானம் மட்டும் இருப்பது அரிது. வெகு எளிதில் பிறரை கவரும் ஆற்றல் பெற்றிருப்பீர்கள். பிறருக்கு நல்ல ஆலோசனைகளை கூறுவீர்களேதவிர ,பிறருடைய சொத்துக்காகவோ பொருளுக்காகவோ ஆசைப்படமாட்டீர்கள்.

மனதில் தோன்றும் எண்ணங்களை தயங்காமல் எடுத்துரைப்பீர்கள். மனதிற்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். ஜல ராசி என்பதால் வெளிநாட்டு யோகம் உங்களுக்கு உண்டு.

மீனைப் போன்று துள்ளித்திரியும் குணமும், பயந்த சுபாவமும் பெற்றிருப்பீர்கள். எந்த நிலையிலும் எல்லோரையும் மதிப்பீர்கள். குடும்பப்பிரச்சினை அதிகரிக்கும் ராசி உங்கள் ராசி. உங்கள் ராசிக்கு தாரமும், தனயனும் வாய்ப்பது அரிது. அதற்கான வழிபாடுகளை செய்து கொள்வதன்மூலமே வாழ்வில் நிம்மதியும், வாரிசுகளால் தொல்லைகளும் ஏற்படாதிருக்க வழி அமைத்து கொள்ள முடியும்.

இப்படிச் சிறப்பு வாய்ந்த குணத்தைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு 9ஆம் இடமான விருட்சிக ராசியில் பிறக்கிறது. 'ஐந்தும் ஒன்பதும்' மிஞ்சும் பலன் தரும் என்று சொல்வர். அந்த அடிப்படையில் பொருளாதார பற்றாக் குறையை இதுவரை சந்தித்து வந்த நீங்கள் இந்த ஆண்டில் மிஞ்சும் அளவிற்கு பலன் பெறுவீர்கள்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் கைகூடும். படிப்பிற்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். பதவி வாய்ப்புகளும் சிலருக்கு வந்து சேரும்.

குரு தன்னுடைய புனிதமான பார்வையை உங்கள் ராசியில் பதிப்பதும் யோகம் தானே. எடுத்த காரியம் யாவினும் வெற்றி. எங்கெங்கு திரும்பினும் புகழ். யோகத்தில் மகிழ வாய்ப்பும் தேகத்தில் தெம்பும் வழங்கும் புத்தாண்டு இதுவாகும்.

### சனிப்பெயர்ச்சிக் காலம்

இதுவரை உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் 22.5.2003 முதல் 4ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாகச் சஞ்சரிக்கப் போகிறார். அதனால் பல விதங்களிலும் குழப்பங்கள் உருவாகுமே என்று பயப்பட வேண்டாம். குரு பார்வை உங்களைக் கைகொடுத்துக் காப்பாற்றும்.

ஆரோக்கியத்தில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும். தாய் வழி உறவில் விரிசல் உருவாகும். வாகனங்களால் விபத்துகளும், பயணங்களால் பலனின்மையும் உருவாகலாம். எனவே, சனீஸ்வர பிரீதி செய்வதன்மூலமும், ஸ்தல வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமும் இன்னல்களிலிருந்து விடுபட முடியும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

23.7.2003 அன்று உங்கள் ராசிக்கு 5இல் சஞ்சரித்து வந்த குருபகவான் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். புதிய முதலீடுகள் செய்து தொழில் தொடங்கும் வாய்ப்பினை உருவாக்கும். உத்தியோகஸ்தர்களுக்கும் திடீர் மாறுதல் கிட்டும்.

சிலர் விருப்ப ஓய்வுபெற்று சுய தொழில் தொடங்க முன் வருவர். உபய ராசி உங்கள் ராசி என்பதால் உங்கள் பேரில் தொழில் தொடங்காமல் மற்ற குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தை ஆராய்ந்து தொழில் ஸ்தானம் வலுப்பெற்றவர்கள் பேரில் தொடங்குவதே நல்லது.

'ஆறில் குருவந்தால் அடுக்கடுக்காய் மாற்றம் வரும்!

ஊர்மாறும் இடம்மாறும்

உத்தியோக மாற்றம் வரும்'!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. எனவே அந்த அடிப்படையில் வரும் மாற்றத்தோடு வசதி பெருகும். வருடக் கடைசியில் வீட்டில் சுபகாரியங்கள் கைகூடும். நீண்டநாள் நடைபெறாத பாகப்பிரிவினைகள் கூட நினைத்தபடி நடைபெறும். பூமி யோகம் உண்டாகும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் வீண்பழிகள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் இருப்பதே நல்லது.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

16.8.2003இல் ராகு, கேதுப் பெயர்ச்சியால் மேலும் பல மாற்றங்களைக் காணப்போகிறீர்கள். எனவே, தன வரவு கூடும். பணம் வசூலாகிப் பரவசப்படுத்தும். வங்கிகளில் வரவு உயரும். ஆனால், உடல் நலத்தில் அடிக்கடி தொல்லைகள் உருவாகும். தசா புத்தி பலம் இழந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி குறையும். கணவன் மனைவியரின் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். எனவே, இக்காலத்தில் சுய ஜாதக ரீதியாக தசாபுத்திக்கேற்ற சிறப்பு வழிபாடுகளும் பொருத்தமான ஷேத்திரங்களில் சர்ப்ப சாந்தியும் செய்து வழிபட்டு வரவேண்டும். அப்போதுதான் அமைதி கிட்டும்.

### பெண்களுக்கு

இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு சென்ற ஆண்டை விடச் சிறப்பானதுதான் இந்த ஆண்டு ஆனால், ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை அதிக கவனமுடன் வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

கொடுக்கல் வாங்கல்கள் திருப்தியளிக்கும். கணவன் மனைவியருக்குள் கனிவு கூடும். தொழில் வளம் மேலோங்கும். உங்கள் பெயரில் நடைபெறும் தொழிலால் உள்ளம் மகிழும் விதத்தில் வருமானம் வந்து சேரும். சுபகாரிய பேச்சு முடிவாகும். விரயங்களை தவிர்க்க இடம் பூமி வாங்கி சுப விரயமாக்கிக் கொள்ளலாம். இல்லையேல் வாகன மாற்றம் செய்து மகிழலாம். வீண்பழிகள் உருவாகும் என்பதால் அண்டை அயலாருடன் அனுசரித்துச் செல்வதே நல்லது.

ஆபரணம் வாங்குவதும் விற்பதும் வாடிக்கையாகலாம். பிறந்த வீட்டிலிருந்து எதிர்பார்த்த அனுகூலம் கிடைப்பது அரிது. இறை வழிபாடுகளில் மனதைச் செலுத்துவதோடு சிறப்பு வழிபாடுகளையும் தேர்ந்தெடுத்துச் செய்தால் சிக்கல்கள் தீரும். செல்வம் சேரும்.

### வளம் சேர்க்கும் வக்ர காலம்

குரு, சனி, புதன் ஆகிய கிரகங்களின் வக்ர காலத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். தொழில்களில் முன்னேற்றம் கூடும்.

தலைமைப் பதவிகள் தானே தேடி வரும், தனலாபம் வருவதில் இருக்கும் தடைகள் விலகும். போட்டிகள் அகலும். புதுப்பாதை அமையும். வாட்டும் பகை மாறும். வளம் வந்து சேரும்.

விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய காலம் செவ்வாய் வக்ர காலம் மட்டுமே.

### ஜனவரி

குடும்பத்தில் அமைதி கிட்டும். எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி ஏற்படும். வக்ர குருவாக இருந்தாலும், அதன் பார்வை பலத்தால் வசதி வாய்ப்புகள் பெருகும். தொழில் முன்னேற்றம் உண்டு. 15ஆம் திகதிக்கு மேல் சூரிய பலத்தால் இடமாற்றம் மற்றும் ஊர்மாற்றங்களைச் சந்திப்பீர்கள். நண்பர்களின் நல் ஆதரவு கிடைக்கும்

### பெப்ரவரி

சனி வக்ர நிவர்த்தியாவதால் சஞ்சலங்கள் விலகும் சந்தோஷங்கள் கூடும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிட்டும். ராகு பலத்தால் சகோதர வழி ஒற்றுமை கூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வரவும், செலவும் சமமாக இருக்கும் மாதமிது. குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். சுபச் செய்தி வந்து சேரும்.

### மார்ச்

தொழில் வளம் மேலோங்கும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப் படுத்தும். தொட்ட காரியம் வெற்றி பெறத் துணையாக நண்பர்கள் ஒத்துழைப்பர். எதிர்ப்புகள் விலகும். ஆன்மீகப் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகளின் திருமணப் பேச்சு முடிவுக்கு வரும்.

### ஏப்ரல்

குருவக்ர நிவர்த்தியாவதால் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். குதூகலம் கூடும். நீண்ட நாள் பிரச்சினை நல்ல முடிவுக்கு வரும். தொழிலுக்கு தீட்டிய திட்டம் வெற்றி பெறும். வருமானம் திருப்தியளிக்கும். வாகன யோகம் கிட்டும்.

### மே

இம்மாதம் சுக்ர பலத்தால் சுகங்கள் கூடும். மாதத்தின் முற்பகுதியில் எல்லோரிடமும் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்ப்புகள் அதிகரிக்கும். 22ஆம் திகதி மிதுனத்தில் சஞ்சரிக்கும் சனியால் அலைச்சல் ஆரோக்கியப் பாதிப்புகளும் அதிகரிக்கும். வரவை விட செலவு இரு மடங்காகும்.

### ஜூன்

செவ்வாய் பலத்தால் இடம், பூமி விற்பனை ஏறபடலாம்.

மிதுனத்தில் சூரியனும் சஞ்சரிக்கப் போவதால் மாதத்தின் பிற்பாதியில் மிக, மிக கவனமுடன் இருப்பது நல்லது. கடன் சுமை கூடும். கவலைகள் சேரும். குடும்பத்தில் உறவினர் மற்றும், அந்நியரால் குழப்பம் ஏற்படும்.

### ஜூலை

இம்மாதம் மாதத்தின் முற்பகுதியில் வசதி, வாய்ப்புகள் பெருகும். 17ஆம் திகதி கடகத்தில் சூரியன் சஞ்சரிப்பதாலும், 23ஆம் திகதி குருப்பெயர்ச்சியாலும் எதிர்ப்புகள் கொடிகட்டிப் பறக்கும்.

பிள்ளைகள் பிரச்சினைகளை உருவாக்குவர். வழிபாடுகளால் வளத்தைக் காணலாம். சூரியசனி சேர்க்கையால் தந்தையின் உறவில் மாற்றம் ஏற்படலாம். போட்டி, பந்தயங்களில் வெற்றி உண்டு.

### ஓகஸ்ட்

குருச்சந்திர யோகத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் தீரும். வீண்பழிகள் அகலும். யாரையும் நம்பிச் செய்யும் காரியங்களில் யோசித்து இறங்குவது நல்லது. மேஷ ராகுவால் மேன்மை கிட்டும். துலாம் கேதுவால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் உண்டாகலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் மாதமிது.

### செப்ரெம்பர்

சுக்ர பலத்தால் சுகங்கள் கூடும். கூட்டுக் கிரக யோகத்தால் இனிதே வெற்றி பெறுவீர்கள். கனவுத் தொல்லை அதிகரிக்கும். கூட்டாளிகளை நம்பிச் செய்யும் காரியங்களில் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. கேது பலத்தால் கீர்த்தி காண்பீர்கள்.

### ஒக்ரோபர்

சனி எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வந்து சேரும். தனி வக்ரத்தால் சஞ்சலங்கள் வந்து சேரும். வாகன மாற்றம், செய்யும் சிந்தனை மேலோங்கும். வீடு மாற்றங்களுக்கான சிந்தனை அதிகரிக்கும். தொழிலில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். பழைய நண்பர்களால் ஆதாயம் கிட்டும்.

### நவம்பர்

விபரீத ராஜயோகம் செயல்படப் போகிறது. திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றிபெறும். வரவைவிட செலவு இருமடங்காகும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க வழி பிறக்கும். அரசு வழி அனுகூலத்தோடு தொழிலை விரிவு செய்வீர்கள்.

### டிசெம்பர்

பொருள் வரவு கூடும். சுபகாரியப் பேச்சு முடிவாகும். 16ஆம் திகதி தனுசில் சஞ்சரிக்கும் சூரியனால் கூட்டு வியாபாரத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும். சொந்த, பந்தங்களின் பாராட்டு கிடைக்கும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். பயணங்களால் பலன் உண்டு.

(முற்றும்)



வறுமைக்கோட்டின்கீழ் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் வைத்து பாடசாலை உபகரணங்கள், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

கல்வியின் நோக்கம், பெற்றோரை மதித்து நடத்தல், கடவுள் பிரார்த்தனையின் மகிமை ஆகிய விடயங்களில் மாணவர்களுக்கு அறிவுரையும் வழங்கப்பட்டன.

உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களையே படங்களில் காண்கிறீர்கள். (ஜ)

# பூக்களின் மருத்துவ பயன்பாடுகள்

உலகிலுள்ள அனைத்து மக்களாலும் ஏற்றிப் போற்றப்படுபவை மலர்கள். அவை திருக்கோயில்களில் பூசைகளுக்குரியவை. ஆண்டவனின் அலங்காரங்களுக்கும் வேண்டப்படுபவை. தினசரி மலர் கொண்டு ஆண்டவனை வழிபாடு செய்பவர்கள் அனந்த கோடி. திருமணப் பெண்களையும், திருமண மேடைகளையும் அலங்கரிப்பவையும் அவையே. கவிஞர்களும் புலவர்களும் எழுத்தாளர்களும் மங்கையர்களை மலர்களுடன் ஒப்புவமை காண்பர். பெரியவர்களும் பிரமுகர்களும் மலர் மாலை சூட்டி வரவேற்கப்படுவதும் கௌரவிக்கப்படுவதும் பண்டுதொட்டு நடைமுறையிலுள்ள வழக்காகும்.

பூக்களில் அதி உயர்ந்ததாகக் கருதப்படுவது றோசா. அது பூக்களில் அரசி போன்றது. அமெரிக்காவில் யான் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தவேளையில் வழிபாட்டு நிகழ்ச்சி ஒன்றுக்காக பத்து றோசா பூக்களை - இலங்கை நாணயப் பெறுமதியில் ஐயாயிரம் ரூபாவுக்கு வாங்கிய ஞாபகம் வருகிறது. 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றக் காலத்தில் மாண்புமிகு ஆனந்ததிஸ்ஸ த அல்விஸ் அவர்கள் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டு அவருக்கான ஆசனத்தில் முதன்முதலில் சபையில் அமர்ந்த வேளையில், அவரது மேசையில் அழகிய குவளை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த கொள்ளை அழகுள்ள தண்டுடன் கூடிய செக்கச் சிவந்த றோசா மலர் ஒன்று அனைவரையும் வரவேற்பது போல அசைந்தாடிக் கொண்டிருந்த காட்சி இன்றும் எனது மனதை விட்டகலாமல் நினைவில் உள்ளது. இவ்விதம் மலர்களின் மகிமையைப் பார்க்கும் நாம், அவற்றின் பயன்பாட்டை வேறொரு கோணத்திலும் நோக்கமுடியும். அதுதான் மலர்களின் மருத்துவப் பயன்பாடாகும். அதைச் சிறிது கௌரவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

***மருத்துவப் பயன்பாடுகள்***

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மலர்களின் மருத்துவப் பயன்பாட்டை உணர்ந்து அவற்றைப் பயன்டுத்தி என்றும் ஆரோக்கியமாக வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புக்குரியவர்கள்.

பூக்களிற் பல, வழிபாட்டிற்கும் அலங்காரங்களுக்கும் மருத்துவத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுபவை. வேறு சில மருத்துவப் பயன்பாடாக உணவுடன் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுபவை.

***றோசா***

றோசாப்பூ இதயத்தைப் பலப்படுத்தும் மருத்துவப் பயன்பாடுடையது. சுவாசப் பைகளின் அழுக்குகளை அகற்றக் கூடியது. ஜீரணசக்தியை அதிகரிக்கச் செய்யும். றோசா கர்ப்பிணிப் பெண்களுக்கு மிகமிக உகந்தது. யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் தாய்மைப் பேறடைந்த பெண்கள் றோசாவை என்றும் நாடிய காலம் ஒன்றிருந்தது. தாமரை மலர் ஆயுள் நீடிப்பைக் கொடுக்கவல்லது. அதைக் காயகல்பம் என எமது முன்னோர்கள் போற்றி வந்துள்ளனர்.

***செவ்வரத்தை***

வசதி படைத்த குடும்பப் பெண்கள் கருவுற்றிருக்கும் காலங்களில் ஆரோக்கியமான அழகிய குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்காக குங்குமப்பூவை வெற்றிலையுடன் சேர்த்து மெல்லுவதும் பாலில் இட்டுக் காய்ச்சிப் பருகுவதுமுண்டு. இவ்வித பயனை எமது வீடுகள் தோறுமுள்ள செவ்வரத்தம் பூக்கள் மூலமும் இலவசமாக அடையலாம் என்பது பண்டைய யாழ்ப்பாணத் தாய்மார்களின் அனுபவமாகும். இவற்றிற்கு உடலின் உஷ்ணத்தை தணிக்கும் தன்மையுமுண்டு. சலரோகிகளுக்கும் சல உபாதை உள்ளவர்களுக்கும் இது மிகமிக உகந்ததாகும்.

***வேம்பும் இலுப்பையும்***

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு காலத்தில் பனைகளைப் போல் வேம்பு, இலுப்பை மரங்களாலும் நிறைந்திருந்தது. குடாநாட்டு வீடுகள் அனைத்திலும் வேப்பம்பூ வடகம் அன்று மிகமிகப் பிரசித்தமானது. மக்கள் உணவில் வேப்பம்பூ முக்கிய இடத்தை வகித்தது. அந்தக் காலம் இன்று அருகிவிட்டது. வேப்பம் பூவும் சலரோக நிவாரணிகளில் ஒன்று. குடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுவது. வயிறு குடற்பாகங்களில் உள்ள கிருமிகளை அழிக்க வல்லது.

**செல்லப்பா நடராசா**

இலுப்பைப் பூவைக் காய வைத்து காரம் சேர்த்து வறுத்திடித்து எள்ளுப்பாகு உருண்டை போலத் திரட்டிச் சூடு ஆறமுன் உணவாகக் கொண்ட யாழ்ப்பாணச் சமூகத்தையும் இன்று காணமுடியவில்லை. குடாநாட்டில் இன்று இலுப்பை மரங்களே அழிந்தொழிந்துவிட்டன. இலுப்பைப் பூவை வாதரோக நிவாரணியாக எமது முன்னோர்கள் கைக்கொண்டனர்

***வாழைப்பூ***

வயிற்றைச் சுத்தப்படுத்தவும், மலச்சிக்கலைப் போக்கவும் உதவுவது வாழைப்பூ. இது குடலில் ஒட்டிக் கொண்டிருக்கக்கூடிய தூம்பு, முடி, மீன் முள்ளுத்துகள்கள் போன்றவற்றை எல்லாம் வெளிக்கொணரும் தன்மை வாய்ந்தது.

***ஆவரசு***

ஆவரசம் பூவும் சலரோக நிவாரணிகளில் ஒன்றாகும். கணைச் சூட்டைத் தணிக்கும் இயல்பினையுடையது.

***தூதுவளை***

தூதுவளைப் பூவை. எள்ளெண்ணெயில் வதக்கி உணவுடன் சேர்த்துக் கொண்டால் கண் பார்வை அதிகரிக்கும்.

***பிள்ளைக்கற்றாளை, அகத்தி***

உடம்பிலுள்ள நோவைப் போக்கும் குணம் பிள்ளைக் கற்றாளைப் பூவுக்குண்டு

வயிற்றுப்புண், தொண்டைப் புண், வாய் அவியலுக்கு அகத்திப்பூ நிவாரணம் அளிக்கவல்லது.

குளிர்ச்சிக்கானது வெங்காயப்பூ.

***பூமாதுளை***

மாதுளையில் பூமாதுளை எனும் இனமொன்றுண்டு. பூமாதுளம் பூக்களை முகர்ந்தாலே பசியின்மை போகும் என்பர் ஆயுர்வேத வைத்தியர்கள். கண் சூட்டைத் தணிக்கவும் சளி உபாதைகளைப் போக்கவும் பூமாதுளம் பூ கைகொடுக்கும். பூமாதுளம் பூவின் மகிமைகளை எனக்கு உணர்த்தியவர் கொக்குவில் குளப்பிட்டியில் வாழ்ந்த ஆயுர்வேத வைத்திய பூபதி உயர்திரு. கோ.க. நடராசபிள்ளை அவர்களாவர். வேம்பு, இலுப்பை, செவ்வரத்தை, ஆவரசம் பூக்களின் பெருமைகளை யான் அறியக் காரணமாக இருந்தவர் என்னுடைய பாட்டியே. இன்று பூமாதுளையை எங்கேயாவது காணமுடிகிறதா? நான் சிறுவனாக இருந்த காலத்தில் எங்கள் வளவில் நிறைய பூமாதுளைப் பூக்களைப் பெறக்கூடியதாக இருந்தது. எனது தந்தையார் சொற்படி அவரது மிகமிக நெருங்கிய நண்பரான வைத்தியர் நடராசபிள்ளைக்கு நான் பூமாதுளம் பூக்களை நிறையச் சேகரித்துக் கொண்டுபோய்க் கொடுப்பது வழக்கம். பூமாதுளம் பூக்களுக்கு அவர் கொடுத்த பெறுமதி தங்கத்துக்கொப்பானது. நடராசபிள்ளை என்றும் என்னை மறந்திலர். அப்பூவின் மகிமைதான் எத்தகையது? கிராமங்களில் ஆயுர்வேத வைத்தியர்கள் பல்கிப் பெருகி வாழ்ந்த ஒரு காலத்தில் அவர்கள் பூக்களின் மருத்துவப் பயன்பாடுகளை மக்களுக்குப் பெரிதும் உணர்த்தினர்.

யாழ்ப்பாணத்தில் எமது பாட்டிமார்கள் தெரிந்து வைத்திருந்த பூக்களின் மருத்துவப் பயன்பாடுகள் இன்றும் எமக்கு நன்மை அளிக்க வல்லவை. ✦

# ஈழத் தமிழர் முழுமை வரலாறு நூலாக விரைவில் வெளியாகவேண்டும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஈழத் தமிழரின் தொன்மைமிக்க வரலாற்றை முழுமையாக எழுதி வெளியிடப்படவேண்டும் என்று தீர்மானித்தது. பேராதனைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா அவர்களைச் சந்தித்து இவ்வரலாற்றை வெளியிடவேண்டியதன் அவசியத்தை விளக்கினார். எழுதும் பணியை பேராசிரியர் இந்திரபாலா செய்தும், செய்வித்தும் தருவாராயின், நூலைப் பதிப்பித்தும் விற்பனைசெய்தும் அந்நூலை தமிழ் அறிஞரிடையேயும் பொது மக்களிடையேயும் பரப்ப உதவுவோம் என்றும் சங்கத்தினர் கூறினர். பேராசிரியர் அவர்கள் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பணியாற்றினார். அவர்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் மீண்டும் யாழ்.பல்கலைக்கழகத்தில் சந்தித்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டனர். ஆனால், அப்பணியை மேற்கொள்ள முன்னமே அவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச்சென்றுவிட்டார்கள்.

மீண்டும், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் பணியாற்றிய பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலாநிதி இரகுபதி ஆகியோரிடம் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களிடமும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் இந்நூலை எழுதித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கமும் இலங்கை அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் என்ற புதிய சங்கத்தை நிறுவினர். இப்புதிய சங்கத்திலும் ஈழத் தமிழர் வரலாற்று நூலை எழுதுவித்து வெளியிடவேண்டும் என்றும் வெளியிடும் பணிக்கு சங்கம் நிதியுதவவேண்டும் என்றும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சங்கத் தலைவராயிருந்த எஸ். வணசிங்க அவர்கள் இப்பொதுச்சபையில் இத்தீர்மானத்தை கொண்டுவர வேண்டும் என்ற அவசியமில்லை என்றும் சங்கத்தின் நூல் வெளியீட்டுச் சபை பொறுப்பில் இதனை வழங்க வேண்டும் என்றும் கூறினார். அதனைப் பல உறுப்பினர் ஏற்றுக்கொண்டனர். எனவே, தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பொதுச்சபை வழங்கிய பணிப்புரையை ஏற்றுக் கொண்டு நூல் வெளியீட்டுச் சபை, இது பற்றி ஆராய்ந்து முடிவு செய்யவில்லை. எனவே, பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் கட்டுரை ஆக்கப்பணியில் ஈடுபட முயலவில்லை.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளையினர் இவ்வரலாற்று நூற்பதிப்புப் பணிபற்றி கூடித் தீர்மானித்தனர். தாய்ச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இப்பிரேரணை கொண்டு வரப்பட்டது. அப்போது வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானிப்பதை தடுத்து ஆய்வுக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், அக்குழுவினர் இப்பணியை ஏற்று மேற்கொள்ளவில்லை.

பல வரலாற்று அறிஞர்கள் முழுமையற்ற தனித்தனி வரலாற்றுக் கட்டுரைகளை எழுதிக்கொண்டிருக்கின்றனர். முழுமையற்ற நூல்களையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். பலரும் ஒன்றாக இணைந்து, ஆராய்ந்து முழுவரலாற்றையும் முழுமையான நூலாக எழுதி இணைந்து செயற்படவேண்டும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இப்பணியை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றுச் செயற்பட முயலவேண்டும்.

**ஆசிரியமணி சி.சிவபாலசிங்கம்**

தென்னிலங்கை வரலாற்று ஆசிரியர்கள் தமது வரலாற்று ஆக்கங்களில், ஈழத் தமிழரின் பழங்கால வரலாற்றை நீக்கியும் மறுத்தும் எழுதி வருகின்றனர். பாடசாலை மாணவருக்கான சமூக வரலாற்று நூல்களிலும் இப்பணி தொடரப்பட்டது. இதனைக் கண்ட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் தாம் மேற்கொள்ளத் தவறிய பணியை உணர்ந்து இப்பொய்மையைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கைகளை வெளியிட்டனர். அதற்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

எனவே, எல்லா வரலாற்று அறிஞர்களும் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினரும் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரும் இணைந்து இப்பணியை மேற்கொண்டு, ஆய்வரங்கை நிகழ்த்தி, உவரையை எழுதி வெளியிட முயலவேண்டும். ஈழத் தமிழர் வரலாற்றுப் பழமையை நிலைநாட்ட முயன்று செயற்படவேண்டும். ★

# ஸ்காபுரோ நகரில் சிறப்புற நடைபெற்ற வாத்திய இசைத்தட்டு வெளியீட்டு விழா

மார்கழி 8ஆம் திகதி கனடாவில் ஸ்காபுரோ நகர மண்டபத்தில் சி.ஸ்ரீதாஸின் முரளிமோகனம், வேய்ங்குழல் வசந்தம் எனும் இரு புல்லாங்குழல் இசைத் தட்டுக்கள் வெளியீட்டு விழா முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்றது. செல்விகள் எலிசபெத் மாலினி, சாந்தினி இலக்குமணநாதன் ஆகியோரின் கனடிய தேசிய கீதத்துடனும், தமிழ்த் தாய் வாழ்த்துடனும் ஆரம்பமான விழாவில் ஸ்ரீதாஸின் மேற்படி மாணவியர்கள் இசைத்தனர். அனுஷ்யா ஜெயலிங்கம், பிரிசாந்தினி நமசிவாயம் ஆகியோர் வீணை இசைத்தனர்.

**தொகுப்பு: த.சிவபாலு**

அதனைத் தொடர்ந்து தலைவர் கனகசபாபதி அவர்கள், ஸ்ரீதாஸ் அவர்கள் இசை பயின்ற மேதைகள். அவர் ஓர் ஏகலைவனாக தனது இசையை தனது குருவாகக் கொண்டு பயின்று மிகச் சிறந்த ஓர் இசைவிற்பனராகத் திகழ்வதோடு மட்டுமன்றி, இந்தியாவுக்கு வெளியே இப்படியான ஓர் இசைத்தட்டை வெளியீடு செய்துவைக்கும்முதல் தமிழர் என்ற பெருமையையும் பெறுகின்றார் எனவும் புகழ்ந்துரைத்தார்.

இசைக்கருவிகளில் புல்லாங்குழல் மிகவும் சிறியதும் மிகப் பழைமையானதுமான ஒரு வாத்தியம். அதனை இசைப்பது மிகவும் சிரமமானது. அரிகாம்போதி இராகம்தான் அதற்குச் சிறந்தது. அரி காம்பு ஊதி என்னும் அர்த்தத்தில்தான் அது இடம்பெற்றிருக்க வேண்டும் எனவும், அரி என்பது வண்டைக்குறிக்கும் அதனால் ஏற்படுத்தப்பட்ட துவாரத்தின் ஊடுவரும் ஒலிப்பிரவாகமே புல்லாங்குழல் இசையெனவும் குறிப்பிட்டார். ஸ்ரீதாஸ் அவர்கள் புல்லாங்குழல் இசையோடு நிற்காது வீணையையும் பயின்று அதிலும் பாண்டித்தியம் பெற்றுள்ளார். அவர் இலங்கையில் வானொலியிலும் பல மேடைகளிலும் இசைவாத்தியத்தை வாசித்துள்ளார். மிகவும் தன்னடக்கம் உள்ளவர் எனவும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, இலங்கை வானொலி கலைஞரும் எழுத்தாளருமான கே. எஸ்.பாலச்சந்திரன் அவர்கள் உரை நிகழ்த்துகையில், ஸ்ரீதாஸ் குடும்பத்தினர் தனது குடும்ப நண்பர்கள் எனவும், திருமதி ஸ்ரீதாஸ் இறைவரித் திணைக்களத்தில் தன்னுடன் ஒன்றாகக் கடமையாற்றியவர். அவர் கலையார்வம் மிக்கவர். திருவாளர் ஸ்ரீதாஸ் அவர்களின் இசைத்துறை வளர்ச்சிக்கு ஆர்வமும் ஊக்கமும் நல்கியவர் என்பதோடு, மிகநீண்டகாலமாக நற்புடன் பழகி வந்துள்ளோன் என்றும், வானொலியில் அவர் இசை வாசித்த வேளைகளிலும் பல மேடைகளில் வாசித்தபோதும் அவரது இசை ஞானத்தை உணரமுடிந்தது.

புல்லாங்குழல் மிகப் பழைமை வாய்ந்தது என்பதற்கு 40 ஆயிரம் வருடங்களுக்கும் 75 ஆயிரம் வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த புல்லாங்குழல் இசைக்கருவி ஒன்றை அகழ்வாய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அது ஒரு கரடியின் கால் எலும்பினாலானது என்பதும் அவர்களது முடிவு புல்லாங்குழல் மிகவும் சிறிய வாத்தியம். அது மிகவும் கடினமான வாத்தியம் அதனை தானாகவே விரும்பிக் கற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் வீணையிலும் சமமாக அவர் சிறந்து விளங்குவது பாராட்டப்படவேண்டியது - என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்




பினர் பி.குதைசுதாஸன் உரையாற்றுகையில், குழல் இனிது யாழினிது என்ற வள்ளுவர் சொன்னதன் அர்த்தம் இவை இரண்டுமே மிக முக்கியமான வாத்தியம் என்பதனால்தான். நான் வாய்ப்பாட்டு இசையை ஆசிரியர் மூலமாக கற்றேன். ஆனால், புல்லாங்குழல் கற்க விரும்பியும் அது என்னால் முடியவில்லை. ஆனால், ஸ்ரீதாஸ் அவர்களோ புல்லாங்குழல் மட்டுமன்றி வீணையிலும் பாண்டித்தியம் பெற்றுள்ளார் என்றால் அவரது திறனை நாம் எப்படிக் கூறுவது? குரல் இல்லையென்றால் விரல் என்பார்கள். அவர் அதனை நன்கு பயன்படுத்தியுள்ளார். இசை வளரவேண்டும், பரப்படவேண்டும், எமது இளைஞர்களுக்கு வழங்கப்படவேண்டும் - எனவும் குறிப்பிட்ட அவர், ஸ்ரீதாஸ் அவர்களின் பணி தொடர வாழ்த்தினார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஒன்ராரியோ நுண்கலை அமையத்தின் பணிப்பாளர் ஜிம் யெராட் உரையாற்றுகையில்:-

கனடிய இசைக்குப் பங்களிப்புச் செய்யும் தமிழர்களை வரவேற்பதோடு ஸ்ரீதாஸ் அவர்கள் தன்னிடம் தனது இரு இசைத் தட்டுக்களையும் கொண்டு வந்து போட்டுக்கேட்கும்படி கூறினார். கேட்டபின்னர்தான் நான் இங்கு வருவதற்கு முடிவு செய்தேன் என்று அவர் பெருந்தொகையில் இந்த மண்டபத்தில் வந்திருந்து ஆதரவு நல்கும் உங்கள் சமூகத்தவர்களின் கலைப் பிரியத்தினை வரவேற்பதாகவும் கூறிப்பிட்டார்.

இலங்கை வானொலியில் இசைத்துறைப் பொறுப்பாளராக இருந்த திருமதி நவராஜகுலம் முத்துக்குமாரசாமி அவர்கள் உரையாற்றுகையில்:-

ஸ்ரீதாஸ் மிகுந்த இசைப்பிரியர். கேள்வி ஞானத்தால் அவருக்கு முக்கியமாக இந்த இசைக்கருவிகளில் பாண்டித்தியம் பெறவைத்துள்ளது. அவரது இசை கலாநிதி ரமணி அவர்களின் பாணியைச் சார்ந்தது. புல்லாங்குழலில் பல இசைகளையும் தந்துள்ளார். ஆனால், அவரின் ஓர் இசைத்தட்டில் ஓர் இராகத்தில் அமைந்திருந்தால் சிறப்பாக அமையும் என்பது எனது அபிப்பிராயம் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றியவர் முனைவர் ரமணி இராமகிருஷ்ணா அவர்கள். அவர் இந்திய இசைத்துறை பற்றி பல ஆக்கபூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார் என்பதோடு கலா என்னும் சஞ்சிகையின் ஆசிரியரும் பொறியியலாளரும் என அறிமுகம் செய்து வைத்தார். ரமணி அவர்கள் உரையாற்றுகையில், இசைத்தட்டு பற்றி விமர்சனம் செய்வதற்கு முதலில் நான் மறுத்துவிட்டேன். ஏனெனில் எனக்கு இசை பற்றி ஆழ்ந்த அறிவு இல்லை. ஆனால், ரசனை என்னிடம் உண்டு. ஸ்ரீதாஸ் அவர்கள் என்னிடம் வந்து கேட்டபோது நான் மறுத்துவிட்டேன். ஒருக்கால் போட்டுப் பார்க்கும்படி கேட்டார். போட்டுக் கேட்டவுடனேயே நான் சம்மதம் தந்தேன் - என்றார்.

பிரபல வீணை வித்துவானும் வாய்ப்பாட்டு வல்லுநருமான திருமதி விஜயலஷ்மி சீனிவாசகம் அவர்கள் உரையாற்றுகையில், இசைக்கருவி வாசிப்பது மிக இலகுவான ஒன்றல்ல. இசையை நரம்புகளின் ஊடாகவும் துவாரங்களின் ஊடாகவும் வாசித்தல் மிகவும் கடினமானது. அத்துறையில் தன் ஆர்வத்தாலும் ஊக்கத்தாலும் பயின்று பாண்டித்தியம் பெற்றவர் திருவாளர் ஸ்ரீதாஸ். புல்லாங்குழல் துளை கருவிகளில் முதன்மையானது. அவ்விதமே நரம்புக் கருவிகளில் வீணை தலைமை வாத்தியம். இவ்விரண்டையும் தேர்ந்தெடுத்த அவர் உண்மையிலேயே தனது தலைமைத்துவத்தை

(13ஆம் பக்கம் பார்க்க)

# நூல் வரிசை



**நூல்:** போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல் (மொழித்திறன், பொதுஅறிவு, நுண்ணறிவு)
**ஆசிரியர்:** பி.உமாசங்கர்.

கல்வி என்பது மனிதனை காலத்திற்கு ஏற்ப புனரமைக்கும் சாதனமாகும். காலத்திற்கேற்ப ஏற்படும் அறிவியல் மாற்றங்களைத் தொகுத்து வழங்கும் கல்விப்பணியில் பொது அறிவும் அதனோடு இணைந்த உ ார்பு விடயங்களும் முக்கிய இடம்பெறுகின்றன ா வயதுப் பிரிவினரு ம் அறிவியல் கல்வி அவசியமானது. தொழில்வாய்ப்புகளுக்கான தேர்வுமு ளும் உ ர்கல்வி அனுமதிக்கான தேர்வு முறைகளுங்கூட பொது அறிவு ாச்சார்புப் பரீட்சை முடிவை அடியொற்றியதாகவே நடைபெறுகின்ற.

இவ்வாறான காலவோட்டத்தோடு, காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இந்நூல் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது.

ஐ.புவனேந்திரன்
*பிரதி அதிபர்,*
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.*



**நூல்:** பச்சை இறகு (ஹைக்கூ கவிதைகள்)
**ஆசிரியர்:** வேலணையூர் பொன்னண்ணா
**வெளியீடு:** மணிமேகலை பிரசுரம்

டென்மார்க்கில் வசிக்கின்ற வேலணையூர் பொன்னண்ணாவின் கவிதைகள் ஐந்தாவது தொகுப்பாக வெளிவருவது மகிழ்ச்சியான விடயம். கவிஞர் பொன்னண்ணா ஈழநாட்டு நினைவுகளை அடிப்படையாக்கிப் பல இனிய கவிதைகளைப் படைத்திருக்கிறார்.

சமூக அவலங்கள் குறித்து அங்கதச் சுவையுடன் கவிதைகள் இயற்றுவதில் தேர்ந்தவர் அவர்.

அவரது ஹைக்கூ கவிதைகள் மனித இயல்புகளையும், மனிதரது போலித்தனங்களையும் சமூகச்சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டுகின்றன.

வல்லிக்கண்ணன்,
சென்னை.



**நூல்:** விளம்பரத்துறை - தோற்றம், வளர்ச்சி, வீச்சு, ஆதிக்கம்.
**ஆசிரியர்:** காவலூர் ராசதுரை
**வெளியீடு:** வசீகரா அட்வேட்டைசிங்

விளம்பரக்கலை சுமார் 5,000 ஆண்டுகள் பழைமைவாய்ந்தது என்றால் பலர் ஆச்சரியமடையலாம். ஆயினும், இன்று உலகெங்கும் பெரியதொரு தொழிற்றுறையாக வளர்ந்துள்ள விளம்பர வர்த்தகத்தின் படிநிலை வளர்ச்சிக்களை இலகு நடையில் விளக்குகின்றது இந்நூல்.



**நூல்:** 'ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள்'
**ஆசிரியர்:** ச.வே.பஞ்சாட்சரம்
**வெளியீடு:** யாழ்.இலக்கிய வட்டம்

மரபாணிவேர் பாய்ந்தெழுந்த இவ்விருட்சம் தந்தது,
நாற்பத்திரு இலக்கியக் கனிக்குலைகளை!
அதைவிட இந்த அட்சயபாத்திரம் அள்ளி வழங்கியது
அயிரக் கணக்கான அனற் கவிதைகளை!
நாற்பத்து நான்கு ஆண்டுகளாகி விட்டன... இந்தக் கவிநதி
ஓயாத அலைகளை உயிர்ப்பித்தபடிதான் இன்றும்
ஓடிக் கொண்டிருக்கிறது!
இந்நதியின் தேடலும் வேட்கையும்
விடுதலையூடாகச் சென்று சேரும் பேரின்பப்
பெருவாழ்வெனும் மாகடல்,
என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது!

த.ஜெயசீலன்.

# தாட்சாயணியின் கவிதை...

## ஞானம்

'நேற்று' என்காலடியில்
சொட்டிப் போனது இரத்தத்தை...
'நேற்றின் இரத்தம்
உறைவதற்குள்...
'இன்றின் கூக்குரல்
கேட்கிறது!
நாளை... 'இன்றின். இர்த்தம்
என் காலை நனைக்கலாம்...!
இறுதில் என்றோ ஒரு நாள்...
'நேற்றின்' இரத்தமும்
எனது இரத்தமும் கலக்கின்றபோது,
எனக்கு...
நாளை என்பதே இல்லாமல் போகலாம்!
அப்போது,
'நான்' என்பதும் தொலைந்து போகலாம்!



-தாட்சாயணி.

# புலம்பெயர்ந்த தாலாட்டு...!

இந்த புலம்பெயர்ந்த தாலாட்டை எழுதிய எனக்கு அந்த தாலாட்டின் தேவை என்ன என்பதையும் எழுதும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்....!!! இரண்டு வேறுபட்ட வாழ்க்கைப் புத்தகத்தை ஒரேநேரத்தில் வாசிக்கத் தெரிந்த வாசகர்கள் புலம்பெயர்ந்த மக்கள். ஒரு கிராமத்து கலாசாரத்தில் இருந்து வந்து முற்றிலும் மாறுபட்ட மேல்நாட்டு கலாசார வாழ்க்கையில் வாழப் பழகியவர்கள். காலங்கள் ஓடுகின்றன. இந்த இயந்திர வாழ்க்கையில் தமிழனின் வாழ்க்கை முறைகள் மாறிவிட்டன. இப்படியாக எல்லாமே மாறிவிட்ட இந்த தேசத்தில் ஒரு தாலாட்டு மட்டும் எப்படி ம்மாறாமல் இருக்கும்...?

அதனால்தான் மாலையிலே பாடவேண்டிய தாலாட்டு காலத்தின் கட்டாயத்தால் காலையில் பாடப்படுகிறது...! காலம் பூபாளத்தை கல்யாணியாக்கி கல்யாணியை பூபாளம் ஆக்கிவிட்டது...! இந்த புலம்பெயர்ந்த மண்ணில் நான் பார்த்துக் கேட்டு கலங்கிய எத்தனையோ தாய்க்குலத்தின் அழுகுரல்கள் என் இதயத்துக்குள்ளே இரகசியமாய் ஒலிக்கிறது...!!!

பூவுக்கு பிறந்தவனே
புத்தம் புது செண்பகமே
காலையிலே பூத்தவனே
சுத்தமுள்ள வெண்ணிலவே
வேலைக்கு போகின்றேன்
விரைவினிலே கண்ணுறங்கு...!

ஆராரோ ஆரிரரோ
அன்பான மன்னவனே
யாரடித்து நீ அழுதாய்
யாரும் இல்லா தேசத்தில்...???

மாமன் இங்கில்லை
மல்லிகைப்பூத் தண்டாலே
அடிப்பதற்கு

தாத்தன் இங்கில்லை
தாவி அணைக்கும்
கையாலே அடிப்பதற்கு

பாட்டி இங்கில்லை
பாலூட்டும் கையாலே
அடிப்பதற்கு

சித்தி இங்கில்லை
சித்திரப்பூஞ் செண்டாலே
அடிப்பதற்கு

ஆராரோ ஆரிரரோ
அன்பான மன்னவனே
யாரடித்து நீ அழுதாய்
யாரும் இல்லா தேசத்தில்...???

மானினமாய் இருப்பவனே
மங்காத மயிலிறகே
சேலைக்குள் அணைப்பவனே
வேலைக்கு செல்கின்றேன்
விரைவினிலே கண்ணுறங்கு

எல்லையில்லா அன்பாலே
எமை ஆழப்பிறந்தவனே
எட்டு மணிஆச்சு ~ உன்
அம்மா சென்றுவிட்டாள் ~ உன்
அப்பா நான் இருப்பேன் பக்கத்திலே
பத்து மணிவரைக்கும்
பக்குவமாய் கண்ணுறங்கு

பால்வடியும் பூமுகமே
பகலில் பூத்த தாமரையே
பத்துமணிக்குப் பின்னாலே
பிள்ளைப் பாதுகாப்பு நிலையத்தில்
புரியாத பிரஞ்சினிலே தாலாட்டு
கேட்டபடி கண்ணுறங்கு

அஞ்சுமணி எப்பவரும்
ஆவலுடன் ஓடிவந்து
அம்மா அணைப்பதற்கு
கண்மணியை கட்டிமுத்தம்
கொடுப்பதற்கு என்று
கனவுகண்டு கண்ணுறங்கு

ரயிலுக்குள் போகையிலும்
குளிர்கொண்டு நடுங்குகையிலும்
சாலையிலே நடக்கையிலும்
சேலைக்குள் உந்தன்முகம்
செருகுப்படும் செல்லமகனே...!


உணவகத்தில் சமைக்கையிலும்
அலுவலகத்தில் துடைக்கையிலும்
ஆனந்தமாய் உந்தன்முகம்
அலைபாயும் அன்புமகனே...!


அன்னை என்று அணைத்திடவும்
தந்தை என்று தடவிடவும்
பாசத்துடன் பால்சோறு நாம் ஊட்டி
பக்குவமாய் தாலாட்டி
வாரிஅணைத்து வையாமல்
முத்தமிட
வாரத்தில் இருதினங்கள்
விடுமுறை வரும்என்று
விம்மாமல் கண்ணுறங்கு
கண்ணான கண்மணியே...!!!

*பாரீஸிலிருந்து:* த.சரீஷ்

# தொலைந்ததாய் இரு!

படபடத்து வெந்து
போயிருந்த எம் நெஞ்சில்
எத்தனை மாற்றங்கள்.
அத்தனையும் நீ எமைவிட்டுத்
தொலைந்ததனால் தான்.
பிரிந்தெங்கோ வாழ்ந்திட்ட
உறவுகள் இணைந்தன.
மலர மறுத்திட்ட
வாச மல்லிகை
மலர்ந்து மணம் வீசியது
சோகங்களே சொந்தமாயிருந்த
வாழ்வு செத்து
செகத்தில் மறைந்தது.
அத்தனையும் நீ எமைவிட்டுத்
தொலைந்ததனால் தான்.
தூரத்தில் இருந்திட்ட
வெண்புறா வாசல் வந்து
சமாதான வசந்தம் தந்தது.
அதுகூட நீ .....
தொலைந்ததனால்தான்.
தொலைந்தாய் போரே நீ
தொலைந்ததாகவே இரு!
மீண்டும் முளைத்து
மக்களின் வாழ்வினில்
தீயினை மூட்டாதே!





கி.அ.தில்லைதாசன்

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**தம்பிநாயகம் றொபேட் தவநாயகம்**

*(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)*

தோற்றம் 17.09.1951 — மறைவு 26.01.1997

'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும்,
ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்'
சங்கீதம் 46:1

என்றும் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரன், சகோதரிகள்.

*தொல்புரம் மத்தி,*
*சுழிபுரம்.*
(13653)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 07 - 1918



உதிர்வு 26 - 01 - 1997

அமரர்

**இராமலிங்கம் தம்பிப்பிள்ளை**

(C.T.B. நவரத்தினம் - மாதகல்)

*எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஆறு*
*மறைந்திடினும் எம் துயரம் ஆறிடுமோ? எமக்கு*
*நல்வழி காட்டி நன்நெறியோடு வாழ வைத்த*
*எம் குலவிளக்கே! உங்களின் நினைவுகள்*
*எம் மனதைவிட்டு என்றுமே அகலாது ஐயா!*

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பிரதான வீதி,*
*மாதகல்.*
(13667)

## வவுனியாவில் இன்று பொங்கல் விழா

பொங்கல தின சிறப்பு நிகழ்வுகள் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ளன. வவுனியா, அரசசெயலகம், சுந்தானந்த இந்து இளைஞர் சங்கம், இந்து சமய விவகார அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வுகளை நடத்தவுள்ளன.

காலை 8 மணிக்கு குருமன்காடு விநாயகர் ஆலயத்தில் விசேட பொங்கலும் பின்னர் காமினி மகாவித்தியாலய மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டும், மாலை சுந்தானந்த மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில இந்து சமய அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், இந்துசமய கலாசார அலுவலகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஏ-164)

## தேவை

கொடிகாமத்தில் இயங்கும் விற்பனைக் குழுவிற்கு நகைச்சுவையாளர் ஒருவர் தேவை.

தொடர்பு: **AVM கலையகம்**
புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்.
(13413)

## விற்பனைக்கு

4ஸ்ரீ, 3ஸ்ரீ Morris Minor, 7ஸ்ரீ Fordescot Wagon கார்களும் 147 - CD 125 Benly, C-90 மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**ஸ்ரீ மோட்டோ வேக்ஸ்**
136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(13665)

கொழும்பில்
உள்நாட்டு, வெளிநாட்டு
பயணிகள் தங்குவதற்கு
சிறந்த விடுதி ராஜ்கோ இன்.
வாகன தரிப்பிட வசதி உண்டு.
தொடர்புகளுக்கு :
**Rajko Inn**
27, Fareed Place, Colombo-4.
Tel : 554065 - 7
(C/25840)

## இலவச மருத்துவ சேவையும் நற்செய்திக் கூட்டங்களும்

**தென்கொரியா** நாட்டிலிருந்து வருகைதரும் கிறிஸ்தவ வைத்தியக் கலாநிதிகள் யாழ்ப்பாண மக்களுக்கு இலவச மருத்துவ சேவை வழங்குகிறார்கள்.

*இடம்:* யாழ்.வீரசிங்கம் மண்டபம்

*காலம்:* 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனவரி
பிற்பகல் 1.00 மணியிலிருந்து 5.00 மணிவரை.
29ஆம் திகதி புதன்கிழமை
காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணிவரை.
பிற்பகல் 2.00 மணியிலிருந்து 5.00 மணிவரை.
30ஆம் திகதி வியாழக்கிழமை
காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணிவரை.
பிற்பகல் 2.00 மணியிலிருந்து 5.00 மணிவரை.

28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் தினமும் மாலை 4.30 மணியிலிருந்து 7.00 மணிவரை நற்செய்திக் கூட்டங்களும் தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்களும் நடைபெறும். எல்லா மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

- (இயேசுவின் வார்த்தை)

✪ *குறிப்பு:* 28ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியிலிருந்து 4.00 மணிவரையும் 29ஆம், 30ஆம் திகதிகளில் காலை 8.00 மணியிலிருந்து 10.00 மணிவரையும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கான விசேட கூட்டங்கள் நடைபெறும். அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாத கிறிஸ்தவ ஊழியர்கள் யாவரும் எவ்வித தயக்கமுமின்றி இக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

*தகவல்:* **போதகர் தேவதாஸ் அன்ரன்**
இம்மானுவேல் சுவிசேஷ சபை,
26, புதிய பூங்கா வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
(13521)





# கனடாவில் கணனித்துறையில் உயர்கல்வி கற்கவேண்டுமா?

இப்பொழுது Pronto data college உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது!

Pront Data College - அதன் 15ஆம் ஆண்டு நிறைவையொட்டி சர்வதேச மாணவர்களுக்கு இப்பொன்னான அனுமதி சீட்டு சந்தர்ப்பத்தை வழங்க முன்வந்துள்ளது.

உயர் கல்வி கற்பதற்கும் மற்றும் Student Visa பெறுவதற்கான சகலவிதமான ஆலோசனைகளும் உதவிகளும் அதற்குரிய நிபுணத்துவம் உடையவர்களால் வழங்கப்படும்.

- கணனி, இலத்திரனியல் வணிக முகாமைத்துவத்தில் (e-Bussines)உயர் கல்வி.
- இவ் உயர் கல்விக்கு TOEFL மற்றும் IELTS தகமைகள் தேவையில்லை
- ஆங்கிலப் பயிற்சியும் வழங்கப்படும்.

**Dip -in e-Business** (கணனி இலத்திரனியல் வணிக முகாமைத்துவம்)


**Dip -in Travel - Tourisum** (சுற்றுலா பயணத்துறையில் டிப்ளோமா)

இன்று யாழ். நகரில் இலவச கருத்தரங்கு

தொடர்புக்கு :
கே.பூர்ணச்சந்திரன்,
124, ராசாவின் தோட்டம் வீதி, நல்லூர்.
தொலைபேசி : 021-2223088, 0777-307841

இடம் : வீரசிங்கம் மண்டபம்
12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் : பி.ப. 2.00 மணி (26-01-2003)

TNT Grafix


விதியை மதியால் வெல்வோம்
சாஸ்திரக் காரர்கள் சிலரின் கை ரேகையைப் பார்த்து விட்டு "இந்தக் கை ரேகைக் காரருக்கு பணம் சேர்க்கவே முடியாது" என்பார்கள். ஆனால் தேசிய சேமிப்பு வங்கியை நாடி வரும் எந்தக் கை ரேகைக் காரருக்கும் சேமிப்பு நிச்சயம்.
சேமிப்பின் முன்னோடிகளான தேசிய சேமிப்பு வங்கி தற்போது முதன் முறையாக சேமிப்பு வைப்புக்களுக்கு ஆயுட் காப்புறுதியை வழங்குகின்றது.
2003 ஜனவரி 1ம் திகதி முதல் புதிய மற்றும் செயற்பாட்டிலுள்ள அனைத்து சேமிப்புக்களுக்கும் இக் காப்புறுதி வழங்கப்படும்.
சேமிப்பும் காப்புறுதியும் சேர்ந்து கிடைப்பது எங்கே?
இப்போது மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக ரூபா. 10,000ற்கு குறையாத சகல சேமிப்புக்களுக்கும் ரூபா. 300,000 வரை இலவச ஆயுட் காப்புறுதி
NSB

## வீதி அபிவிருத்தி அதிகார சபை
## கேள்விப்பத்திர அறிவித்தல்
### வாடகைக்கு வாகனம் பெற்றுக்கொள்ளல்

யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காரியாலயங்களில் உள்ள அதிகாரிகளின் உத்தியோகபூர்வ பாவனைக்காக ஒரு பயணிகள் வாகனத்தை, பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக நாளாந்த கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

#### நிபந்தனைகள்

01. வாகனம் டீசல் வாகனமாக இருத்தல் வேண்டும்.
02. ஆசனங்களின் எண்ணிக்கை ஐந்திற்கு (05) குறையாததாக இருத்தல்வேண்டும்.
03. நடப்பு வருடத்திற்கான வரியும் காப்புறுதியும் பெற்றிருத்தல் வேண்டும்.
04. வாகனத்தின் உரிமையை உறுதிப்படுத்தும் பதிவுப் புத்தகம் இருத்தல்வேண்டும்.
05. எரிபொருள், ஓட்டுநர் ஊதியம், திருத்த வேலைகள் அனைத்தும் வாகன உரிமையாளரால் நிறைவேற்றப்படல்வேண்டும்.
06. வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனம் ஞாயிறு, போயா தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை வேலை செய்யத்தயாராக இருத்தல் வேண்டும்.
07. வாகன ஓட்டுநர் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
08. வாகனத்தின் தரத்தினைப் பொறுத்து வாடகைக்கு அமர்த்துவது தீர்மானிக்கப்படும்.
09. வாகனம் வட பகுதியில் உள்ள சகல பிரதேசத்திற்கும் சென்று வருவதற்குத் தயாராக இருத்தல்வேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் கோரப்பட்ட முழு விவரங்களும் முறையாக நிரப்பப்பட்டு மூடிய கடித உறையினுள் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள அலுவலக கேள்விப்பத்திரப் பெட்டியினுள் 03.02.2003 அன்று பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன்பு சேர்ப்பித்தல்வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் *இல. 18, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில* அமைந்துள்ள மாகாணப் பணிப்பாளர் காரியாலயத்தில் திருப்பிச் செலுத்தப்படாத கொடுப்பனவாகிய ரூபா 100.00 செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

மேலதிக விவரங்கள் 222 2517 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

வே.தர்மகுலசிங்கம்
மாகாணப் பணிப்பாளர்/வ-கி (வடக்கு),
(C-26221) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

## புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி,ஜன.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வறுமைக் கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த தலா மூன்று மாணவர் வீதம் ஒன்பது பேருக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் மன்றப் பொதுக் கூட்டத்தில் முன்னாள் தலைவர் அமரர் ச.நமசிவாயம் நினைவு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக மன்றத் தலைவர் ந.சற்குணராசா தெரிவித்தார். (எ-117)

## WANTED

Full time house keeper and cook needed must speak English.
*Please Call*: 0777 2726698
*T.P.*: 5298 (13687)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
**மணிசாமி P.T.R.**
யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
*பார்வையிடும் நேரம்:* காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (13679)

## கைதடி தெற்கு சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

பருத்தித்துறை மண்ணின் மைந்தன் அமரர் சாண்டோ M.துரைரத்தினம் அவர்களினால் பயிற்சியளிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவரும் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரருமாகிய சாண்டோ செல்வராசா அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரர்களால் நடத்திக் காண்பிக்கப்படும்.

### வீரதீரச் செயல்கள்

*இடம்:* கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மண்டபம்
*காலம்:* இன்று (26.01.2003) ஞாயிறு பி.ப. 2 மணி.
கண்டு களிக்கத் தவறவிடாதீர்கள்!
பிரவேசம்: **50/=, 20/=** (13700) கை.தெ. சனசமூக நிலையம்.

## artlink2002 THE INTERNATIONAL ART WORKSHOP IN SRI LANKA



### நவீன புகைப்படக் கண்காட்சி

15 - 20 ஐப்பசி 2002
**Barefost Gallery, கொழும்பு.**

08 - 15 கார்த்திகை 2002
**Alliance Francaise, கண்டி.**

20 - 23 மார்கழி 2002
**Fort, காலி.**

28 - 31 தை 2003
நாவலர் மண்டபம் (நாவலர் வீதி), யாழ்ப்பாணம்.

கண்காட்சி நேரம்:
மு.ப. 10.00 - பி.ப. 6.00 (13698)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குமாரசாமி புனிதவதி

33, நாவலடி லேன், வண்ணார்பண்ணையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட (மெக்கானிக்கர்) குமாரசாமி புனிதவதி 21.01.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - செல்லம்மா தம்பதிகளின் மகளும் விக்னேஸ்வரன் (இந்தியா), இந்திரகுமார் (ஜேர்மனி), சிவனேஸ்வரன் (ஜேர்மனி), மகாலக்ஷ்மி (பிரான்ஸ்), வாசுகி (இலங்கை), உமாதேவி (லண்டன்), உதயகுமாரி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தி (இந்தியா), மங்களேஸ்வரி (ஜேர்மனி), வனஜா (ஜேர்மனி), அற்புதநாதன் (பிரான்ஸ்), சற்குணானந்தன் (இலங்கை), மகாதேவன் (லண்டன்), சுதாகரன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராமச்சந்திரனின் அன்புச் சகோதரியும், தனுசன்-விமலன் (இந்தியா), கம்சனா - கீர்த்தனா (ஜேர்மனி), வனஜா - பர்மிதா (ஜேர்மனி), ஜனந்தன் - ஐங்கரன் - கௌரி (பிரான்ஸ்), ஐங்கரன்-செந்தில்குமரன் (இலங்கை), அனுசன் - கயல்விழி (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33, நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (13697)
தகவல்:
சு.சுதாகரன்
(மருமகன்)

## திருமதி நவரத்தினம் இராசமணி

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் இராசமணி 22.01.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் சிவநடராசா (இந்தியா), காலஞ்சென்ற இந்திரராசா, சந்திரராசா (பிரான்ஸ்), சற்குணராசா (பிரான்ஸ்), தவமலர் (சுழிபுரம்), மதிவதனி (ஜேர்மனி), வர்ணமகாராசா (பிரான்ஸ்), சிவானந்தராசா (பிரான்ஸ்), நித்தியானந்தராசா (கனடா), சிறீஸ்கந்தராசா (சங்கானை ப.நோ.கூ.சங்கம்), வசந்தராசா (சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயலட்சுமி, சாரதாதேவி, சகுந்தலாதேவி, பகவத்கீதா, தவச்செல்வம், கணேசதாசன், சியாமாலா, வள்ளியம்மா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்லத்துரை, சரஸ்வதி மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியம், தம்பிஐயா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பல பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளை உடையவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*
T.P.: 070-212314
021-222 5271 (13706)
தகவல்:
சிறீஸ்கந்தராசா
(மகன்)

# நீங்கா நினைவுகளில் 41ஆம் நாள்....



**பாலசிங்கம் ஐங்கரன்**
தோற்றம்:
1971.12.09



**செல்வத்துரை பாலசிங்கம்**
தோற்றம்:
1933.09.08



**சண்முகம் சிவகுமாரன்**
தோற்றம்:
1963.02.24

மறைவு: **2002.12.17**

*எம் இல்லத்தின் குலவிளக்குகளே!*
*அவனியிலே எம் வளம் பொங்கும்*
*வாழ்வுக்கு வித்திட்ட கலங்கரை விளக்குகளே!*
*இன்று கரைகாணா தேசம் சென்றீரோ!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*தலங்காவற் பிள்ளையாரை வேண்டுகிறோம்.*

*இல.61, செல்வத்துரை பதி,*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (13689)

- குடும்பத்தினர்.

## ஜே.கே. அரங்கள்

இன்ஜினியர்கள் பாவிக்கின்ற, பெறுமதிக்கு பொருத்தமான ஜே.கே. அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

**ஜெனரல் எக்கியூப்மன்ட்ஸ் லிமிடெட்**

316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 12.
போன்: 345046, 327264, 343822, 430799
பக்ஸ் : 434637
(சி-24331) TALENT ads



**SRI LANKA FESTIVAL FOR THE PERFORMING ARTS**
**AFFILIATED TO**
**THE BRITISH & INTERNATIONAL FEDERATION OF FESTIVALS**

For Music, Dance & Speech of which Her Majesty The Queen is Patron
To be held Islandwide from May to July 2003
With
Specialized Adjudicators from the United Kingdom
Participants
Amateur performers of a minimum age of 3 yrs. Solo/Dual and Group performances

**Music**
Oriental/Western Musical Instruments, Solo & Choral singing.

**Speech & Drama**
Choral speaking, Story Telling, News Reading, Bible Reading, Prose & Sight Reading, Public Speaking, Mime, Improvisation, Creative Writing, Acting of a Poem or Drama.

**Dancing**
Classical Ballet, Free Style, Jazz, Tap, Folk Dancing, National Character & Modern Dancing, Drumming, Oriental Dancing, Western Dancing.

❖ Certificates will be awarded to all participants.
*Trophies & Medals to winners *Special Award for the overall Champion.

A festival provides many things: the stimulus of preparing for a public occasion, the opportunity to hear the work of others and the chance to receive advice from a Professional adjudicator.... someone whom that performer may never have the opportunity to meet in any other way.

❖ **A workshop and a meeting for teachers of English regarding the above will be held as follows:**

*Date:* 01st February 2003 (Saturday)
*Venue:* **Chundikuli Girls' College, Jaffna.**
*Time:* 9.00a.m. - 1.00p.m.

*Organized by*
**The Institute of Music, Speech & Speaking Skills (Pvt.) Ltd.**
*1-1/1, Stamboul Place, Colombo - 03*
(C/26230)


## 41ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 09 - 12 - 1971



இறப்பு 17 - 12 - 2002

## அமரர் பாலசிங்கம் ஐங்கரன்

பிறப்பும் இறப்பும் வாழ்வின் நியதிதான் - ஆனால்
உங்கள் இறப்பு சதிகாரர்களின் வலையில் பின்னப்பட்டதோ?
தீயுடன் சங்கமமானதேன்?
தீரவில்லை எங்கள் துயரம்!
காலன் பறித்த உயிரை மீட்டிட
நாங்கள் எங்கே சென்று முறையிடுவோம்?

*உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் மாமா, மாமியின் கண்கள் குளமாகி நிற்கின்றன!*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இல. 75, லோறன்ஸ் வீதி, கொழும்பு 06இல் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்,
திரு.திருமதி சந்திரா சுந்தரலிங்கம்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*
(13723)

## முதியோர் பராமரிப்பு இல்லம் ஆரம்பம்

காரைநகர்,ஜன.26

காரைநகர் மத்தியில் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் கடந்த வியாழக்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

காரைநகர் மத்தி கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் ரி. கிருபாகரன், முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தை வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

காரைநகர் மத்தி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் காரை மத்தி சிவகாமி அம்பாள் ஆலய தில்லையம்பலம் மடாலயத்தில் இந்த முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் நடத்தப்படவுள்ளது. (எ-73)

## ஸ்காபுரோ........

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைநாட்டியுள்ளார் என்றும் குறிப்பிட்டார். கேள்விஞானம் என்பது அவருக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதம். அதன்படி கேட்டதை இசைக்கும் தன்மையை ஏற்படுத்திக்கொண்டார் எனவும், அவர் பிரபலமானவர்களிடம் இசைக்கருவிகளைப் பயின்றுள்ளார் எனவும் குறிப்பிட்ட அவர், அவர் தொடர்ந்து இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என வாழ்த்தினார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னை பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் உரையாற்றுகையில், இசைக் கருவிகளில் எது முதலில் தோன்றியது என்பது யாராலும் அறுதியிட்டுச் சொல்லமுடியாததாகவுள்ளது. பல அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இசைப்பது என்பது சர்வசாதாரணமான ஒன்றல்ல. இரண்டு, மிக சிரமமான இசை வாத்தியங்களில் அவர் பாண்டித்தியம் பெற்றுள்ளார் என்றால அது சாதாரணமானதல்ல. தமிழ்களின் வாழ்வோடு இசைக்கலை பிணைந்தது. ஸ்ரீதாஸ் அவர்களின் இசைத்தட்டை வெளியீடு செய்தமை பாராட்டப்படவேண்டியதோடு, இது ஒவ்வொருவரதும் வீடுகளிலும் இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

பதிலுரை நல்கிய ஸ்ரீதாஸ், தனது இந்த முயற்சிக்கு தம் குடும்பத்தினருக்கு தான் கடப்பாடுடையேன் எனவும், அவர்களின் ஆதரவுதான் இதற்குக்காரணம் எனவும் குறிப்பிட்ட அவர், இசைத்தட்டைத் தயாரிக்கும்படி எனக்கு ஆலோசனை கூறியவர்களும் அவர்களே என்றார்.

வேறுபட்ட ரசனைகள், விருப்புக்கள் மக்களிடமுண்டு. ஆனால், எனக்கு இசையில் மிகப்பற்றும் விருப்பும் உண்டு. அதனால் இசைத் தட்டை வெளியீடு செய்தேன். வீணையிலும் இசைத்தட்டைச் செய்யவுள்ளேன் எனவும் குறிப்பிட்ட அவர், இவ்விசைத் தட்டுக்களை வாங்கி எனக்கு உங்கள் ஆதரவை நல்கவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டார். முன்னாள் இலங்கை வானொலிப் பணிப்பாளர் எஸ்.இராசசுந்தரம் இசைத்தட்டை வெளியீடு செய்ய, மூத்த இசைக்கலைஞர் சங்கீதபூஷணம் இராஜலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டதோடு, ஸ்ரீதாஸ் அவர்களின் தாயார் முன்வந்து இசைத்தட்டைப் பெற்று மகனைப் பெருமைப்படுத்தியது சபையோரை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. ஸ்ரீதாஸ் அவர்களின் புதல்வன் செந்தூரன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது. ☆


## சாரதி தேவை

எமது நிறுவனத்தில் தங்கி நின்று
வேலை செய்யக்கூடிய
வான் சாரதி தேவை.
(வயது 40இற்கு மேல்)
**யோகாஸ் ஆடை அகம்**
(ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்)
18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி-26233)



## புதிய வகுப்புகள்

*தையல், சிகையலங்காரம், ஐசிங் போன்ற பல பயிற்சி வகுப்புகள் நாளை (27.01.2003) திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளதால் முற்கூட்டியே பயிற்சிகளைப் பெற விரும்புவோர் உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

***சிறி சாயி நிறுவனம்***
மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி.
❖ மிகக் குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும்.
(13708)



## BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்

**A/L 2005** ☆கணித ☆உயிரியல் வகுப்புகள்

| | |
|---|---|
| பௌதிகம் | திரு.ஜெயசீலன் |
| இரசாயனம் | திரு.மகேஸ்வரன் |
| இணைந்த கணிதம் | திரு.B.ரவீந்திரன் |
| உயிரியல் | திரு.ஞானேந்திரன் |
| | திரு.தயாபரன் |

(13718)

ஆரம்பம்: 27-01-2003 திங்கள் 4.30 மணி



## முகவர்கள் தேவை

வாகனங்களின் ரின்கர் வேலைகளுக்கும், ஏனைய வெல்டிங் வேலைகளுக்கும் பாவிக்கும் 'காபைட் தாங்கி மற்றும் ARC ட்ரான்ஸ் போமர்களை இலங்கையில் உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமான Finto Enterprises நிறுவனத்தின் உற்பத்தி பொருட்களை விநியோகிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் முகவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

FINTO ENTERPRISES

**பின்ரோ என்ரபிறைசஸ்**

*"காபைட் தாங்கிகளின்" உற்பத்தியாளர்களும், கைத்தொழில் துறை வாயுக்கள், B.I தகடுகள், நாகம்பூசிய தகடுகள், வாயுச்சிலிண்டர்கள், வெல்டிங் உபகரணங்கள், மின்மாற்றிகள். இரும்பு மற்றும் வெல்டிங் பொருட்களின் விநியோகத்தர்கள்.*

தலைமை அலுவலகம்:
116/2, தொலங்கப்பத்த றோட், வத்தளை.
தொலைபேசி: 932537, 939984
0777 318937
தொலை மடல்: 932537


## முதலாம் ஆண்டுத் திதி அழைப்பு

எமது அன்புத் தெய்வமாக விளங்கிய

**முருகேசு நடராசா (வாத்தியார்)**

அவர்கள் 06.02.2002இல் அமரராகிவிட்டார். அன்னாரின் முதலாம் ஆண்டுத் திதி நாளை (27.01.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு.* (13715)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஆங்கில சுருக்கெழுத்தாளர்)*

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 23.01.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் அருமைப் புதல்வனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சிவசோதி (கனடா), சித்திரசேனன் (கனடா), காலஞ்சென்ற தயாமதி, வளர்மதி (கனடா), பரமேஸ்வரன் (ஜேர்மனி), சிவபாலன் (ஆசிரியர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்), பகீரதன் (INFOSAT (PVT.) LTD.) ஆகியோரது அருமைத் தந்தையும் கோணலிங்கம், யோகராணி, ஜெயகாந்தன், றெஜினா, மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும் சபேசன், கிரிஜா, பிரசாந்தன், றக்ஷனா, லட்சியா, சரண்யா, விதுர்ஷன், மதுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பிற்பகல் 4.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (27.01.2003) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

54, FRAZER AVENUE,
DEHIWELA.
T.P.No: 714374 (சி-26228)
தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

ஸ்ரீகாந் எசென்ஸ் குறொசறீஸ் ஊழியரான சிதம்பரப்பிள்ளை கந்தசாமி நேற்று (25.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*131/1,பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.* (13724)
தகவல்:
க.சுந்தரலிங்கம்
(மைத்துனர்)

## ஈச்சமோட்டை சனசமூக நிலையம் அறிவித்தல்

இதுவரை காலமும் தனித்து இயங்கி வந்த ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகமானது, **19.01.2003இல்** ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இனிவரும் காலங்களில் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் என்பதை அனைவருக்கும் அறியத்தருவதுடன், விளையாட்டு சம்பந்தமான அனைத்து விடயங்களுக்கும் நிலையத்துடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

(13733) **- நிர்வாகம்.**


*மலிவு விலையில்*

**மொபிடெல்**

கையடக்க தொலைபேசிகள்.

Mobitel

கொழும்பில் இருந்து விற்பனைக்கென விஷேசமாக வருகை தந்துள்ளார்கள்.



*தொடர்புக்கு:-* **சிறிகாந்,**

சதீஸ் ஒலிப்பதிவுக் கலையகம்,

பஸ்நிலையம் முன்பாக,

யாழ்ப்பாணம். T.P. 071 399199



சிறப்பு விற்பனை நாள்கள் **24.01 ~ 28.01** வரை

(13727)


## 31ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில்
09 - 04 - 1931



ஆண்டவன் அடியில்
27 - 12 - 2002

### அமரர் கணபதி முத்தையா

அன்பை யாசித்த எமக்கு ஏனிந்தப் பிரிவு?
யுகம் யுகமாய் எம்மை அடைகாக்க
எண்ணிய உங்கள் நினைவு கனவானதோ?

என்றும் உங்கள் அன்பு நினைவுடன்:
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், அயலவர்கள்.

*நாவற்குழி கிழக்கு,*
*தச்சன்தோப்பு.* (13729)

## முன்பள்ளி மாணவரிடையே இன்று போட்டிகள்

காரைநகர்,ஜன.26

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மாதாந்தம் முன்பள்ளி மாணவர்களிடையே நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டித் தொடரில் ஜனவரி மாதத்திற்கான போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் காலை 9.30 மணி தொடக்கம் நடைபெறும் இப்போட்டிகளில் காரைநகரில் உள்ள முன்பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக நல்லியக்கச் சபைச் செயலர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.இப்போட்டிகள் தொடர்ந்து ஒவ்வொரு தமிழ் மாதப்பிறப்பன்றும் நடைபெறும் என்றும் -

ஜனவரி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை முறையே சிவபுராணம், அபிநயப்பாட்டு, பேச்சுப் போட்டி, பொது அறிவுப் போட்டி, ஆத்திசூடி, தேவாரம், கொன்றைவேந்தன், திருவாசகம், ஆங்கிலப் பாட்டு, கணிதம், திருக்குறள், நுண்ணறிவுப் போட்டி என முறையே ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-73)

## ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பம் கோரல்

ஜி.சீ.ஈ. உயர்தரம் 2003 ஆம் ஆண்டுக்குரிய விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடுவதற்கான பரீட்சகர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த வருடம் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கும், உயர்தர வகுப்பு உள்ள பாடசாலைகளுக்கும் குறித்த விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.தெரிவு செய்யப்பட்ட 12 நகரங் களில் ஜி.சீ.ஈ. உயர்தரம் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும்.

ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சைத் திணைக்கள மதிப்பீட்டுக் கிளைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் நாகரெத்தினம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்காலை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி மாணிக்கம் நாகரெத்தினம் நேற்று (25.01.2003) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் வீரகத்தி - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும், மாணிக்கத்தின் அன்பு மனைவியும், கணபதிப்பிள்ளை (இந்தியா), யோகேஸ்வரி, தங்கராசா (இ.மி.சபை.மன்னார்), நேசராசா (லண்டன்), காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் யோகேஸ்வரன் (இந்தியா), செல்வராசா (ஜேர்மன்), ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், வீரலட்சுமி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கந்தையா மற்றும் நாகலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,* தகவல்:
*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.* (13725) N.ஜெயசுதன் (பேரன்)

### கந்தையா காமாட்சி

வேலணை மேற்கைச் சேர்ந்த கந்தையா காமாட்சி அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் பொன்னம்பலம், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, கனகம்மா, கமலாம்பிகை, வாலாம்பிகை, சிவகடாட்சம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு,* தகவல்:
*வேலணை.* (13728) அரசகேசரி ஐங்கரன்.

### கனகரட்ணம் சிவானந்தன்

*(இளைப்பாறிய தபால் ஊழியர், சங்கானை.)*


சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும், பழைய தபாற்கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் சிவானந்தன் நேற்று (25.01.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - செல்லம்மா தம்பதிகளின் புதல்வனும் பராசக்தியின் கணவரும் தில்லைராஜன் (ஹொலண்ட்), சிவசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இரத்தினம்மா, மகேஸ்வரி மற்றும் நாகரத்தினம் ஆகியோரின் சகோதரனும் நாகலிங்கம் - விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும் சிவானந்தன் (யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி - ஆசிரியர்), சாந்தினி (ஹொலண்ட்) ஆகியோரின் மாமனாரும் சிவலக்ஷன், கிருசன், சங்கவி (ஹொலண்ட்), பவல்யா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வராஜனின் சகலனும் இரத்தினம்மாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
*பழைய தபாற்கந்தோர் வீதி,* மனைவி, பிள்ளைகள்,
*சங்கானை.* (13732) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை பாலசிங்கம்**
(பிரபல கொழும்பு வர்த்தகர், M.B. சுவாமிப்பிள்ளை அன்கோ உரிமையாளர்)

தோற்றம் : 08.09.1933
மறைவு : 17.12.2002



**அமரர் பாலசிங்கம் ஐங்கரன்**

தோற்றம் : 09.12.1971
மறைவு : 17.12.2002



**அமரர் சண்முகம் சிவகுமரன்**

தோற்றம் : 24.02.1963
மறைவு : 17.12.2002


### முத்தீப விளக்குகள்

மூன்று குடும்பங்களின், குலவிளக்காகச் சுடர்விட்ட
தீபங்கள் பதினேழாம் திகதி அத் தீபச் சுடரை
காலன் கைப்பற்றிக் கொண்டு விட்டான்.
அவனுக்கு அவனியிலே அவர்கள் அன்பாக
இருப்பது பொறுக்கவில்லை என்றுதான்
எண்ணத் தோன்றுகின்றது.
நாம் எல்லோரும் எத்தனை கனவுகள்
கற்பனை எல்லாம் செய்தோம். அத்தனையும் இடிந்து விட்டன.
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றதேனோ!
உங்கள் ஒவ்வொரு செயலையும் எண்ணி எண்ணிக் கலங்குகின்றோம்.
சொல்வதற்கு வார்த்தை இன்றித் தவிக்கின்றோம்.
உங்கள் மூவரினதும் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

இல.2C, 40ஆவது லேன்,
வெள்ளவத்தை.
தொலைபேசி - 364720

**- குடும்பத்தினர்.**

(சி-26229)



# எப்பாடுபட்டாவது படிக்க வையுங்கள்

கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமையாகும். வறுமை அல்லது வேறு காரணங்களைக் காட்டி உங்கள் பிள்ளையின் கல்விக்குத் தடை போடாதீர்கள். எப்பாடு பட்டாவது உங்கள் பிள்ளைக்குக் கல்வி புகட்டுங்கள். கல்வி மட்டுமே உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை வளமாக்கும்.




**உங்கள் பிள்ளைகளைத் தினந்தோறும் பாடசாலைக்கு அனுப்புங்கள்.**

மனித வள அபிவிருத்தி, கல்வி, கலாச்சார விவகார அமைச்சு, யுனிசெப் கூட்டு முயற்சி

unicef

Grey Worldwide


தங்கப்பரிசு
Nestlé NESTOMALT
தினமும்
தங்கம்
வெல்லுங்கள்
தினமும் ஒரு வெற்றியாளர் ரூ 15,000/- பெறுமதியான சுவர்ணமஹாலின் தங்க ஆபரணங்களை வெல்லும் பொன்னான வாய்ப்பு. இருவாரம் ஒரு முறை இன்னும் ஒருவர் மாபெரும் பரிசாக ரூ 35,000/- பெறுமதியுள்ள சுவர்ணமஹாலின் தங்க ஆபரணங்களை வெல்லலாம்.
நீங்கள் செய்ய வேண்டியது 400 கிராம் நெஸ்டமோல்ட் பக்கற் மூடிப்பட்டியில் அல்லது டின்னைச் சுற்றியுள்ள லேபலில் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிட்டு
'நெஸ்டமோல்ட் தங்கப்பரிசு'
நெஸ்லே லங்கா
த.பெ.இல. 1711, கொழும்பு
என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டியது மட்டுமே!
Nestlé NESTOMALT
தங்கம் பெறத் தாமதமேன்....
யாழ்.வாழ் மக்களுக்கும்!
பொன்னான மோல்ட் பானம் தரும் பொன்னான வாய்ப்பு
(13730)

## மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றம்
## அறிவித்தல்

இன்று (26.01.2003) நடைபெறவிருந்த மன்றப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 02.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறும்.

புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு நடைபெறவுள்ளதால் அனைத்து வணிகர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும்,
பிரேரணைகள் இருப்பின் கூட்டத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

க. வேதநாயகம், தலைவர் (C/26236) சி.குணரத்தினம், செயலாளர்


# மரண அறிவித்தல்கள்

## C.M. பொன்னையா இராமநாதன்

*(ஓய்வுபெற்ற Shroff, Mercantile Bank )*

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராமநாதன் நேற்று (25.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான C.M. பொன்னையா - சௌபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் சிவமணியின் அன்புக் கணவரும் மல்லிகா தேவி, மன்மதராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தேவராஜா, நாகபூசணி ஆகியோரின் அன்பு மாமனாரும் தயான், பன்னீர்ச்செல்வம், கமலாஜினி ஆகியோரின் பாசமிகு பேரனும் பூமணி, பராசக்தி, லீலாவதி, பத்மநாதன், மனோன், காலஞ்சென்ற புவனசிங்கம் மற்றும் நேசராஜன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3மணியளவில் நடைபெற்று, தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*17/6 மகளிர் கல்லூரி ஒழுங்கை,*
*மானிப்பாய்.*
(13742)
தகவல்:-
மு.தேவராஜா (மருமகன்)

## திருமதி சின்னத்தம்பி செல்லம்மா

*(சாரையடி)*

தென் புலோலி, சாரையடி, வீரபத்திர கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி செல்லம்மா நேற்றுமுன்தினம் (24.01.2003) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சிவலிங்கம் (டென்மார்க்), யோகேஸ்வரி (டென்மார்க்), ராஜேஸ்வரி (சாரையடி), பரமேஸ்வரி (ஹொலண்ட்), சிவகுமாரி (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (லண்டன்), நிறைஞ்சலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரியும் தனலட்சுமி (டென்மார்க்), ஆறுமுகசாமி (டென்மார்க்), கணேஸ்வரன் (ஹொலண்ட்), யோகநாதன் (ஜேர்மனி), றஜனி (லண்டன்), சிவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகன்யா, சிந்துஜா, பகீரதன், காண்டீபன், நிஷாந்தினி (டென்மார்க்), லோஜினி, குகேந்திரன், சர்மி, ஜர்ஷன் (ஜேர்மனி), தர்ஷிகா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2003) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சாரையடி,*
*புலோலி தெற்கு, புலோலி.*
(C/26238)
தகவல்:
ராஜேஸ்வரி (மகள்)

## சோமசுந்தரம் வாமதேவன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்சமயம் பிரான்ஸில் வசித்தவருமான சோமசுந்தரம் வாமதேவன் அவர்கள் நேற்று (25.01.2003) சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தருமலிங்கம் - கமலம்மா தம்பதிகளின் மருமகனும், இராசலக்சுமியின் (இளைப்பாறிய அதிபர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை), அன்புக் கணவரும், மேகலை (கனடா), சத்தியதேவன் (பிரான்ஸ்), இராஜதேவன் (ஆசிரியர், கொழும்பு), காலஞ் சென்ற மகாதேவன் மற்றும் கோசலை (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன் (கனடா), நந்தினி (பிரான்ஸ்), வளர்மதி (கனடா), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலநாதன் யோகநாதன், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான துரைராசா, மகாலிங் கம் மற்றும் விக்னேஸ்வரி, சிவஞானம், கருணைமலர், இராசராசேஸ்வரி, அருணகிரிநாதன், கேதாரநாதன், சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் பவனின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(C/26239)
தகவல்:
சிவஞானம் (மைத்துனர்),
ஞானேஸ்வரி (சகோதரி)

## திருமதி குருசாமி சின்னம்மா

மண்டைதீவு, 6ஆம் வட்டாரம், மணியகாரன் வளவைச் சேர்ந்த திருமதி குருசாமி சின்னம்மா 20.01.2003 அன்று மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருசாமியின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை - அமராவதி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சின்னப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, மாணிக்கம், ஆசைத்தம்பி, அன்னலிங்கம், பவளம்மா மற்றும் செல்லத்துரையின் சகோதரியும் கனகசபாபதி (ஓய்வுபெற்ற உதவி விவசாயப்பணிப்பாளர்), கண்ணகை (ஓய்வுபெற்ற கணக்காளர் - கனடா), சறோயாதேவி (அதிபர், தோட்டவெளி அ.த.க.பாடசாலை, மன்னார்), அருணாசலம், காலஞ்சென்ற நிர்மலா மற்றும் திலகவி (தாதி உத்தியோகத்தர் - கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் இராயேஸ்வரி, பரிமளகாந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கனடா), செல்வரத்தினம், மலர்தேவி (ஆசிரியர், பரஞ்சோதி மகாவித்தியாலயம் - கோண்டாவில்), ஸ்ரீகாந்தன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் மங்கையர்க்கரசி (கனடா), உமாகராசா (கனடா), கலையரசி, ஸ்ரீபாதன் (ஹரினி ஹாட்வெயர் உரிமையாளர்), கௌரீசன் (யூனியன் அசூரன்ஸ்), ஆதிரை, அனந்தரூபன், செந்தூரன், ஹம்சவதனி, சிறோமி, சியாமளி, ஸ்வேதினி, சிந்து, தீபன் ஆகியோரின் பேர்த்தியும் ஆரணி, பவதாரணி, ஹரினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2003செவ்வாய்க்கிழமை மன்னார் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*197, பொற்பதி வீதி,*
*கோண்டாவில்.*
(13739)
தகவல்:
கனகசபாபதி (மகன்)

## வீரதீரச் செயல் நிகழ்வு

கைதடி,ஜன.26

கைதடி தெற்கு சனசமூக நிலையக் கட்டட நிதிக்காக நடத்தப்படும் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக வீரர்களின் வீர, தீரச் செயல்கள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. (எ-75)

## இலவச மருத்துவ முகாம்

அச்சுவேலி,ஜன.26

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம், உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் மருத்துவ முகாம் இன்று காலை 9 மணிமுதல் அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், மருத்துவ மாணவர்கள், பிரபல வைத்தியர்கள் உள்ளிட்ட குழுவினர் வைத்திய பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

வறிய மக்களுக்கு இலவசமாக கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. (எ-11)

## தென்கொரிய டாக்டர்கள் நடத்தும் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஜன.26

தென்கொரியா நாட்டிலிருந்து வருகை தரவுள்ள வைத்திய கலாநிதிகள் இலவச மருத்துவ சேவை ஒன்றை எதிர்வரும் 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1மணிமுதல் மாலை 5 மணிவரையும், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 9மணி முதல் மாலை 5மணி வரையும் இந்த இலவச மருத்துவ சேவை நடைபெறும்.

(எ-9)

## தவறிவிட்டன

இ.இராஜராஜன் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் பூங்கனிசோலைக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள்

**56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

முகவரியில் கொடுத்துதவவும். (13738)


G.C.E. O/Lயினை முடித்த மாணவர்களுக்கான விசேடதொர் ஆங்கிலப் பாடநெறி

இலவச ஆங்கிலப் பேச்சு பயிற்சி பாடநெறி

DIPLOMA IN ENGLISH COURSE

*சரளமாக எழுத, பேச, வாசிக்க 90 நாள்களில் பயிற்சி*

இப்பாடநெறியானது தமிழ் விளக்கத்தில் கூடியதாக இருப்பதால் யாவரும் வீட்டில், தொழில் புரியும் இடத்தில் இருந்தவாறே கற்றுக் கொள்ளமுடியும்.

பாடநெறிக் கட்டணம் இலவசம்
பாடநெறி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி : 25.02.2003
மேலதிக விவரங்களுக்கு ரூபா 4.50 சதம் பெறுமதியான மூன்று (3) முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

The English Language Institute.
P.O.Box 083, Kandy.
Tel. 0777-802849.



ராஜா யாழ்ப்பாணம்.




விஜய், ஸ்நேகா, மனோரமா?
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30



நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சிந்து நடித்த



நெஞ்சினிலே

TOMB RAIDER (C/26240)



நாகம்ஸ் சுன்னாகம்.

சூர்யா, ஜோதிகா, ரகுவரன் நடித்த



உயிரிலே கலந்தது

காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30



## இயற்கை மூலிகை மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினைகள், தலையிடி, வாதம், நாரி உளைவு, கை கால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாகக் குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
Dr.R.K.நவனீதன் *DYNS SMP NC*
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
*யாழ். உல்லாசப் பயணியர் விடுதி,*
*வெலிங்டன் சந்தி*
*(முனீஸ்வரா கபே அருகில்), யாழ்ப்பாணம்.*

இம்மாதம் யோகாசன வகுப்புக்கள் நடைபெறும்.

(13721)

முகாம் நடைபெறும் நாள்கள் ஜனவரி 26,27,28,29,30,31 மற்றும் பெப்ரவரி 1,2,3 ஆம் திகதிகளில்


## ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்



**A.R. சிவகுருநாதன் அவர்கள்**

யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், அத்தியடி வாழ் பெருமகனும் ஆகிய அமரர் A.R. சிவகுருநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப்பிள்ளையாரை வேண்டுகிறோம்.

அத்தியடிப்பிள்ளையார் கோயில் நிர்வாகத்தினர்,
அத்தியடிவாழ் மக்கள். (13735)

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் இரத்தினசபாபதி சிவகுருநாதன்

அத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட A.R. சிவகுருநாதன் நேற்று (25.01.2003) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், A.R.ஆறுமுகம், காலஞ்சென்றவர்களான A.R.சுப்பிரமணியம், A.R.அம்பலவாணர், திருமதி வள்ளிநாயகி நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரஞ்சினி, மனோகரி (ரெலிக்கொம், யாழ்ப்பாணம்), கிரிதரன் (U.K), பகிதரன் (U.K), சாந்தினி (கொழும்பு), சங்கரி (U.K), சுவேந்திரன் (U.K) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சதாசிவம் (நில அளவையாளர்), நிலாந்தி (U.K), அனுசா (U.K), பாலசிங்கம் (கொழும்பு), இளஞ்சே... (U.K), பேரானந்தன் (ராஜன் - U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் வித்தியாதரன், அபிராமி, ஆரதி, ரேவதி, துவாரகா, மையூரதன், கஸ்தூரி, பிரணவி, ஆதவன், ஜனகன், கவன், யனோதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.102, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*
(13734)
தகவல்:
திருமதி சதாசிவம் இரஞ்சினி (மகள்)

## சண்முகம் செல்லத்துரை

*(ஓய்வுபெற்ற சுகாதார ஊழியர்)*

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவில், முருகமூர்த்தி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்லத்துரை நேற்று (25.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், பாக்கியநாதன் (பிரான்ஸ்), செல்வராணி, ஜெயராணி (ஆசிரியை, முத்துத்தம்பி ம.வி.), செல்வேந்திரன் (லண்டன்), புஷ்பராணி (பிரான்ஸ்), பாக்கியராணி (பிரான்ஸ்), தனுஷன் (ஆஸ்திரேலியா), அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஷ்பவதி (பிரான்ஸ்), தியாகராஜா (Nisol Corrugated Cartons LTD, Ekala, Ja - Ela), வரதராஜா, ரஜனி (லண்டன்), ஜெயதாசன் (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), சந்திரப்பிரியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷா, வினோத், லஜித், ரகுராம், ரம்மியா, லவண்யா, செல்சியா, சர்மியா, கீர்த்தனா, கவினியா, நிக்ஷன், டிலக்ஷன், தர்யுன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*123/6, கோவில் வீதி,*
*நல்லூர்.*
(13737)
தகவல்:
பாக்கியம் (மனைவி),
செல்வராணி, ஜெயராணி (மகள்மார்)

## கந்தையா சோமசேகரம்

*(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி)*

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வந்தவருமான கந்தையா சோமசேகரம் அவர்கள் 24.01.2003 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சிறிரஞ்சன் (கனடா), சிறிதரன் (லண்டன்), ரஜனி (கோண்டாவில்), ரமணி (கனடா), ரதினி (அமெரிக்கா), ராகினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகிழ்மலர், ஜகதாம்பாள், யோகராஜன், மனோகரன், ரகுமார், தில்லைநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

*இருபாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
(13740)
தகவல்:
ரஜனி (மகள்),
பத்மநாதன் (மைத்துனர்),
மகேந்திரநாதன் (மைத்துனர்).

# கொடிகாமத்தில் நடமாடும் செயலக சேவை

தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் நலன்கருதி கொடிகாமத்தில் நடமாடும் பிரதேச செயலகத்தினை நடத்த பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

வாரத்தில் இருநாள்கள் நடமாடும் செயலகத்தினை கொடிகாமத்தில் நடத்துவதற்கு யாழ்.அரசஅதிபர் ஒப்புதல் வழங்கியுள்ளார் என்றும் -

அடுத்த மாதம் தொடக்கம் நடமாடும் செயலக அலுவலகம் இயங்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 29 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த நடமாடும் அலுவலகம் திறக்கப்பட்டதும் பெரும் நன்மை அடைவர் என்றும் - கூறப்பட்டது. இதேவேளை - தென்மராட்சி மேற்கு பிரதேச மக்களுக்கான நடமாடும் செயலகத்தை கைதடியில் நடத்துவதற்கும் ஏட்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது (எ-117)

# பேரவை உறுப்பினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர் ஒருவரை தடுத்து நிறுத்துவது சட்டவிரோதமானது மனித உரிமையை மீறும் செயல் என்று அவர்களிடம் எடுத்துக் கூறினர்.

அவர்களின் வாதங்களை ஏற்க மறுத்த மாணவர்கள் சிலர் ஆவேசமடைந்து சரவணபவன் வந்த காரை பின்னால் தள்ள முயன்றனர். ஒரு சிலர் கற்களையும் வீசினர்; கெட்ட வார்த்தைகளால் ஏசினர்; கூச்சலிட்டனர்.

அவரைத் திரும்பிச் செல்லவேண்டும் என்று கோரி சில மாணவர்கள் காரை தூக்க முயன்றனர். சுமார் 20 நிமிடமாகப் பெரும் களேபரம் இடம் பெற்றது.

நிலைமை மோசமடைவதை அடுத்து வன்செயல்களுக்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காக அவர் தனது காரை பின் நோக்கி நகர்த்தி வாயிலுக்கு அண்மையில் ஒரு மணி நேரம் தாமதித்து நின்றார்.

சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அவருடன் கலந்துரையாடினர். பின்னர் பேரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர் திரும்பினார்.

'ராகிங்' தொடர்பாக கடந்த 16ஆம் திகதி உதயனில் வெளியான வாசகர் கடிதத்தின் எதிரொலியாகவே இந்த மறிப்புப் போராட்டத்தை பல்கலைக்கழக மாணவர் நேற்று மேற்கொண்டனர்.

இவ்விடயம் குறித்து நிர்வாக இயக்குநர் சரவணபவன் தெரிவித்ததாவது:-

நான் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர்தான். ஆனால் அந்தப் பதவியின் நிமித்தம் இந்தப் பேரவைக் கூட்டத்துக்கு வரவில்லை.

என்றாலும் அமைதியான முறையில் - அஹிம்சை வழியில் - மாணவர்கள் உதயனுக்கு எதிரான தமது கருத்தை வெளிப்படுத்த இதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்த முயன்றிருப்பார்களேயானால் அதையாரும் பெரிதாக குறை கூறமாட்டார்கள்.

ஆனால், மாணவர்கள் பண்பாக நடந்ததாக கூறமுடியாத நிலைமை தான் அங்கு இருந்தது. அவர்கள் எனக்கு எதிராக தாங்கியிருந்த பதாகைகளில் என்மீது அப்பட்டமாகப் பொய்யான - வீணான அபவாதங்களை கிளப்புகின்ற - குற்றச்சாட்டுகளைத் தாங்கியிருந்தனர். உதாரணத்துக்கு நான் 'ஐ.தே.கட்சி மத்திய குழு உறுப்பினன்' என்றும் கூடக் குறிப்பிட்டிருந்தனர். அது முழுத் தவறு. இத்தகைய கருத்தை - நான் ஐ.தே. கட்சியின் சாதாரண உறுப்பினன் என்றாவது - அவர்கள் நிரூபித்தால் நான் எனது பத்திரிகை நிறுவனத்தையே மூடிவிட்டு போகத் தயார். இத்தகைய குற்றச்சாட்டுக்கள் இதன் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

அவலை இடிப்பதாக நினைத்துக் கொண்டு உரலை இடித்த் கதையாகி விடக்கூடாது. 'ராகிங்' விவகாரத்தில் செய்தி வெளியிட்ட உதயனுக்கு எதிராகக் கிளம்புகின்றோம் என்ற பெயரில், உதயனுக்கு எதிராக மாணவர்கள் தரப்பில் தாங்கப்பட்ட பதாகைகளிலும், புனைப் பெயர்களில் வெளியாகி - மாணவர்களால் விநியோகிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற - துண்டுப் பிரசுரங்களிலும் உதயனுக்கும் எமக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட பல குற்றச்சாட்டுக்கள், கடந்த காலத்தில் எந்தச் சக்திகளுக்கு எதிராக சமூகத்தை எழுச்சி கொள்ள உதயன் விளைந்ததோ அந்தப் பிற்போக்குவாதச் சக்திகளுடன் உதயனும் இணைந்ததே என்று காட்ட வைக்கும் முயற்சியாக உள்ளன.

குடாநாட்டின் மக்கள் எழுச்சிக்குக் காலாகக் கூடிய விடயங்களை நிரந்தரமாக அடைத்து மூடுவதற்கு முயலும் சிலரின் சதி வேலையாக இது இருக்கலாம் என்று சந்தேகப் படுகின்றேன். அவர்களுக்குப் பக்க பலமாக மாணவர்கள் - தெரிந்தோ தெரியாமலோ - துணைபோவது வேதனைக்குரியது.

அச்சுறுத்தல்கள், உயிராபத்துக்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் எனது ஆசிரியபீடப் பணியாளர்கள் செய்த பணி பாராட்டப்படவேண்டியது. 'ராகிங்' செய்திக்காக அவர்களின் கடந்தகால போற்றுதற்குரிய சேவையை கொச்சைப்படுத்த முயல்வதும், அவ்வாறு திரிவுபடுத்தும் முயற்சிகளுக்கு துணைபோவதும் நேர்மையான - சமூகக் கட்டுப்பாட்டுடன் செயற்படுகின்ற - துணிச்சலான - பத்திரிகையாளர்கள் தங்கள் பணியைத் தொடராமல் விட வழி செய்துவிடும்.

நமது சமூகமும் பத்திரிகையும் கடந்து வந்த பாதை கரடுமுரடானது. தற்போதைய அமைதி நிலை பஞ்சு மெத்தை போன்றதாக இருக்கலாம். நாளை நிலைமை என்ன என்று யாருக்கும் தெரியாது. அது பஞ்சு மெத்தையாக இருந்தால் நல்லது. மீண்டும் கரடுமுரடான - முற்புதராக - வராது என்பது நிச்சயம் இல்லை.

எனவே கடந்ததை மறந்து - எதிர்காலத்தை உறுதிப்படுத்தாமல் - நிகழ்கால வாய்ப்பு வசதிகளை நம்பி - இதுவரை இருந்ததை தவறான முறையில் கொச்சைப்படுத்துவது எதிர்காலத்தில் கவலைப்படும் நிலைமையை ஏற்படுத்தி விடலாம் என்பதை உணரவேண்டும் - என்றார் சரவணபவன். (ஐ-3-9-10)




# ஆயுதங்களைக் கைவிடுமாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் இட்டுள்ளோம்.

ஒரு பிரச்சினை தீரவேண்டுமானால் இருபக்க புரிந்துணர்வையும், அவர்களின் நிலைப்பாடுகளையும் அறிந்து செயற்படவேண்டும்.

ஏன் சண்டை பிடிக்கின்றீர்கள் என்று புலிகளிடம் கேட்டோம். தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பெறுவதற்காகவே சண்டை பிடிக்கின்றோம் - என்று பதில் அளித்தார்கள். நீங்கள் ஏன் எங்கள் மீது படை எடுக்கின்றீர்கள் என்று புலிகள் எம்மிடம் திருப்பிக் கேட்டனர். நீங்கள் தனிநாடு கேட்கின்றீர்கள். அதனால்தான் படை எடுக்கின்றோம் என நாம் பதிலளித்தோம்.

இப்படி மனம்விட்டுப் பேசுவதால் இந்த அச்சங்களுக்கு இப்போது விடை காணப்பட்டுள்ளது.

யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுக்கள் நடைபெறுகின்றன. தமிழர்களின் உரிமைகளை ஊர்ஜிதப்படுத்த சமஷ்டி முறையை ஏற்படுத்த அரசு தயாராகிவிட்டது. இதனையேற்று தனிநாட்டுக் கோரிக்கையை புலிகள் கைவிட்டுள்ளனர்.

இது எமது சமாதான முயற்சிகளுக்கு கிடைத்த ஒரு பெரிய வெற்றி. உடனடியாக புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும், தனி நீதிமன்றம், பொலீஸ் நிலையங்கள் என்பவற்றை மூடிவிட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

இப்பொழுது யுத்தநிறுத்தம்தான் செய்துள்ளோம். பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை. படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே இவை அமைக்கப்பட்டுள்ளன. நிரந்தரமான தீர்வு ஒன்று ஏற்பட்டபின் மறுசீரமைக்கப்படும் - என புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமஷ்டி முறை ஏற்படுத்தப்படும் போது இப்பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும்.

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். உடனடியாக அங்கு குடியமர்த்த முடியாது. காணி உரிமையாளர்கள் யார் என்பதை முதலில் கண்டறியவேண்டும்.

அவசரப்பட்டு வேறு நபர்களை குடியமர்த்திவிட்டால் உண்மையான காணி உரிமையாளர்கள் அரசுக்கு எதிராக வழக்குத் தொடரலாம் அதே வேளை இன்றும் 20ஆயிரத்துக்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருக்கின்றன.

பலாலி விமானத் தளம் பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே இவ்விடயம் தொடர்பாக சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைகளும் பெற்றுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் அமைதிப் படையின் முன்னாள் தளபதிகளான மைக்கல் றோஸ் (பிரித்தானியா) சதீஸ் நம்பியார் (இந்தியா) ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. மைக்கல் றோஸ் தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளார். இந்திய அரசின் இராணுவ ஆலோசகராக கடமையாற்றும் சதீஸ் நம்பியார் இன்னும் சில தினங்களில் தனது அறிக்கையை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவை கிடைத்தவுடன் இவ்விடயம் தொடர்பாக புலிகளுடன் பேசி மீள்குடியேற்றம் தொடர்பாக இறுதி முடிவு காணப்படும் என்று - பிரதமர் கூறினார்.

புலிகளின் வானொலி நிலையம் தொடர்பாகவும் ஒலிபரப்புக் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பாகவும் ஜனாதிபதி உட்பட எதிர்க்கட்சியினர் சர்ச்சைகளை ஏற்படுத்திவிட்டனர்.

முன்பு எமது அனுமதி இன்றியே புலிகளின் குரல் சேவையை நடத்தினார்கள். நிறுத்தவேண்டும் என்று கட்டளையிட்டால் அதை அவர்கள் நிறுத்தப்போவதில்லை.

அப்போது - அனுமதியின்றி நடத்திய புலிகள் இன்று அரசின் அனுமதியுடன் நடத்துகின்றனர். அரசாங்கத்தை அவர்களும் மதிக்கின்றனர். புலிகளின் நிலைப்பாட்டில் பாரிய திருப்பம் ஏற்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட கருவிகள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் அவை பரீட்சிக்கப்படவேண்டும் என படைத் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இதனாலேயே நோர்வே தூதரகத்தின் உதவி கோரப்பட்டது. அவர்கள் முன் பரிசீலிக்கப்பட்டன.

சட்டவிரோதமான கருவிகளோ ஆயுதங்களோ காணப்பட்டால் அவற்றைத் திருப்பி அனுப்பவும் உத்தரவிட்டிருந்தது.

இந்த அடிப்படையிலேயே வானொலி ஒலிபரப்பு உபகரணங்கள் பாட்சிக்கப்பட்ட பின் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இதனைத் தெளிவாக ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளோம் என்றும் - பிரதமர் அங்கு கூறினார். (ஐ)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமைக்கும் எனக்கும் எதுவித தொடர்புமில்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 'வத்தி' வைத்தவர்களின் வேலையாக இப்பிரசாரம் இருக்கலாம்" - என்று கருத்து வெளியிட்டார் ஈ.சரவணபவன். (ஐ)

பல வருடங்களின் பின்
மீண்டும் யாழ்நகரில்...!
K.R.S. No. -1 றோஸ் நாடு
K.R.S. No. -1 சம்பா
எல்லா வர்த்தக ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.
(13655)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வானைப்பிள்ளை கணபதி

சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை கணபதி நேற்று (25.01.2003) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதியின் அன்பு மனைவியும், கதிரேசு (ஓய்வு பெற்ற அதிபர், யா/மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை), யோகம்மா (ஆஸ்திரேலியா), வல்லிபுரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா (ஆஸ்திரேலியா - முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்), ஆச்சிமுத்து, செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராஜமோகன் நிர்மலாதேவி, சந்திரமோகன் சுஜாதா, கருணாகரன் ஜசிந்தா, கமலாகரன் வாணி, கிருபாகரன் ஜமுனா, குணசேகரம் ஜசிந்தா, கலாமதி ரவிசங்கர், கங்காதரன் கரோலினா, கவிதாகரன் கவிதா, கீதாகரன், கோபிகரன், அபராஜிதன், அருஞ்செயன், அபர்ணா ராஜ்குமார், அர்ச்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவர்து இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*
(13748)
தகவல்:
க.கதிரேசு (மகன்)

## திருமதி குலசிங்கம் செல்லம்மா

காரைநகர், சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குலசிங்கம் செல்லம்மா நேற்று (25.01.2003) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*50/1, அம்மன் வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்,* (13736)
தகவல்:
திருமதி புவனச்சந்திரன் (மகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.